|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 குரோதி வரு ஆனி-ஆடி மீ ஜுலை - 2024 இதழ் 7





ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
**ஸ்ரீ காமகோடி
கோஶஸ்தானம்**




# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## ஆனி - ஆடி

மலர் 13 ஜூலை 2024 இதழ் 7


### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| தெய்வத்தின் குரல்<br>பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 7 |
| நீதிக் கதைகள்<br>பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 10 |
| அனுக்கிரஹ பாஷணம்<br>பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | 16 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 20 |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 23 |
| ராஜ தரங்கிணி | 24 |
| காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் | 26 |
| ஆனி மாத விசேஷ தினங்கள் | 21 |
| நாம ராமாயணம் | 31 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 33 |
| குரு ர்ணிமா சிந்தனை | 34 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 35 |
| ஆழ்வார்கள் சரித்திரம் | 42 |
| பாரத ஸாரம் | 47 |
| ப்ரபோத சிந்தாமணி | 41 |
| மகாபாரத சுருக்கம் | 42 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 46 |
| முக ஸாரம் | 47 |






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com

சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |

Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*கல்வியெல்லாம் கற்பித்தாய் நின்பால் நேயம்*
*காணவைத்தாய் இவ்வுலகம் கானல் என்றே*
*ஒல்லும் வகை அறிவித்தாய் உள்ளே நின்றென்*
*உடையானே நின்னருளும் உதவுகின்றாய்*
*இல்லை எனப் பிறர் பால் சென்றிரவா வண்ணம்*
*ஏற்றம் அளித்தாய் இரக்கம் என்னே என்னே*
*செல்வ அருட் குருவாகி நாயினேனை*
*சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவ*

*[வள்ளலார்]*

*அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்*
*ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செய்ய வேண்டும்.*
*எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே*
*எந்தை நினது அருட்புகழை இயம்பிடல் வேண்டும்*
*செப்பாத மேனிலை மேல் சுத்தசிவ மார்க்கம்*
*திகழ்ந்தோங்க அருட் சோதி செலுத்தியிடல் வேண்டும்*
*தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்*
*தலைவ நினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே*

*[வள்ளலார்]*

# ஆசிரியர் பக்கம்

## *ஸப்தபதியும் உச்ச நீதிமன்றமும்*

In a significant verdict on the Hindu Marriage Act the Supreme Court has ruled that the Registration of Union will be null and void if a valid ceremony and rituals like the " Sapthapathi" are not performed. Young men and women must think deeply about the institution of marriage ........ Before they enter upon it and as to how sacred the said institution is…. A Hindu Marriage Facilitates procreation, consolidates the unit of family and solidifies the spirit of fraternity within various communities. SUPREME COURT VERDICT : -

*ஹிந்து கல்யாண சட்டத்தின் படி ஸப்தப்தி முதலான சடங்குகள் இல்லாமல் நடத்தப்படும் கல்யாணங்கள் செல்லாதவை. மேலும் இளைஞர்களும், வதூக்களும் திருமணம் செய்து கொள்ளும்முன் நம் கல்யாண முறை எவ்வளவு புனிதமானது என்பதை உணர வேண்டும். ஹிந்து கல்யாணம் பத்தி ப்ர்ஜோத்பத்தையையும், குடும்பத்தின் மேன்மையையும் பலவிதமான ஜாதிகளைடையே சகோதரத் தத்வத்தையும் உறுதிப்படுத்துகிறது - உச்ச நீதி மன்றத் தீர்ப்பு.*

*உச்ச நீதி மன்றம் பல மாறுபட்ட தீர்ப்புகளை வழங்கினாலும் சில சமயங்களில் நல்ல தீர்ப்புகளை வழங்கும். அவைகளில் ஒன்றுதான் மேலே உள்ளது. நமது திருமணத்தில் பாணிக்ரஹணமும் ஸப்தபதியும் மிக முக்யமானவை. இவ்விரண்டும் இல்லையெனில் திருமணம் செல்லாது. இந்த தீர்ப்பு மட்டுமல்ல நமது தர்ம ஸாஸ்த்ரங்களும் இதை வலியுறுத்துகின்றன.*

***‘‘ பாணிக்ரஹணிகா மந்த்ரா: நியதம் தாரரக்ஷகம்***
***தேஷாம் நிஷ்டா து விக்யேயா வித்வத்பிஸ்ஸப்தமே பதே ‘‘***

*மனு ஸ்ம்ருதி*

*பாணிக்க்ரஹண மந்த்ரம் சொல்லி மணந்தால்தான் அம்மனைவி தர்ம பதியாவாள்.*

*அதிலும் தீ வலம் செய்யும் போது மனைவியை ஏழு அடி நடக்கச் சொல்லி அம்மி மிதிக்கும் மந்த்ரத்தை கணவன் கூறுவதால் மனைவியின் மேன்மை துலங்கும்.*

*கேளிக்கைகளும், உல்லாஸங்களும் நமது திருமணங்களில் வ்யாபிக்கப்பட்டு உண்மையான பொருளுள்ள சடங்குகள் பின்தள்ளப்பட்டுள்ளன. பெரியவர்களும் இவைகளுக்கே முன்னுரிமை தருகிறார்கள் என்பது கவலைக்குரிய விஷயம். திருமணம் என்பது ஆண், பெண் இணைவது என்பது மட்டுமல்லாமல் இரு குடும்பங்கள் இணைவது என்பதை அனைவரும் உணர வேண்டும். சரி இந்த சடங்கு என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.*

### *பாணிக்ரஹணம்*

*‘‘ நீ நல்ல பிள்ளைகளைப் பெற்று, கிழத்தனமடையும் வரை என்னுடன் இருப்பதற்காக உன் கையை பிடிக்கிறேன். பகன், அர்யமா, ஸவிதா, இந்த்ரன் முதலான தேவர்கள் உன்னை வீட்டிற்கு தலைவியாக இருக்கும் பொருட்டு எனக்கு அளித்துள்ளார்கள் ’*

*இன்னும் மூன்று மந்த்ரங்கள் இதே போல் கூறியபின் ஸப்தபதி ஆரம்பம்.*

*அக்னியை வலம் வந்து 7 மந்த்ரங்கள் கூறப்படுகின்றன. அவற்றின் ஸாரம்*

*ஏ பெண்ணே! உனக்கு அன்னம் குறைவில்லாமல் இருப்பதற்கும், உனக்குப் புஷ்டி, வ்ரதங்களை அனுஷ்டிப்பதற்கும், சுகத்தை அளிப்பதற்கும், பசுக்கள் முதலான நாற்கால் ப்ராணிகள் அபிவ்ருத்திக்கும், ஆறு ருதுக்களும் உனக்கு அனுகூலமாகும்படி செய்வதற்கும், வீட்டில் ஹோமங்கள் குறைவில்லாமல் நடப்பதற்கும் ஸ்ரீ மஹா விஷ்ணு உன்னைப் பின் தொடர்வாராக.*

### *ஸப்தபதி ஸபதம்*

*ஏ பெண்னே! ஏழு அடிகளைத் தாண்டிய நீ எனக்குத் தோழியாக வேண்டும். ஏழு அடிகளைத் தாண்டிய நாம் நண்பர்கள் ஆகிவிட்டோம். உன்னுடன் நட்பை அடைகிறேன். உன் நட்பிலிருந்து விலகமாட்டேன். என் நட்பிலிருந்து நீயும் விலகாதே. நாம் சேர்ந்தவர்களாயிருப்போம். இருவரும் செய்ய வேண்டியதை ஒருமித்து ஸங்கல்ப்பிப்போம். நல்ல அன்புள்ளவர்களாயும், நல்ல*

*மனமுள்ளவர்களாயும், பிடித்தமுள்ளவர்களாயும் உணவையும், பலத்தையும் சேர்ந்தே அனுபவிப்போம். கருத்து ஒருமித்து இருப்போம். வ்ரதங்களை சேர்ந்து அனுஷ்டிப்போம். நம் விருப்பங்கள் சேர்ந்தவையாய் இருக்க. நான் மேலுலகமெனின் நீ பூலோகம். நான் சுக்லமெனின் நீ அதை தரிப்பவள். நான் மனமெனின் நீ வாக். நான் ஸாம கானமெனின், நீ ரிக் வேதம். அத்தகைய நீ என்னை பின்பற்றுபவளாக இரு. புருஷப் ப்ரஜைகளை அடைவதற்காகவும் செல்வத்தை அடைவதற்காகவும் இன் சொல் உள்ளவளே நீ வருவாயாக.*

*மேலே சொன்னவை நம் சாஸ்த்ரம் சொல்லும் ஸப்தபதி. தம்பதியின் பந்தத்தையும், அவர்கள் கடமையையும் தெளிவாகக் கூறும். இதை கோர்ட் கூறி தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது. கல்யாணம் நிச்சயம் செய்தவுடன் பிள்ளை, பெண் இருவருக்கும் கல்யாண மந்த்ரங்களை விளக்கிச் சொல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்பது மகா பெரியவாளின் எதிர்பார்ப்பு. மந்த்ரங்களின் பொருளைத் தெரிந்து கொண்டு விட்டால் விவாகரத்தே இருக்காது என்று நாம் நம்புகிறோம். மேலும் இந்த மந்த்ரங்களின் பொருளை எல்லா ஜாதியினருக்கும் தெரிவிக்கலாம் என்றும் நினைக்கிறோம். [அவர்கள் இதை மந்தரமில்லாமல் செய்வர்.] இந்த மந்த்ரங்களின் பொருளை அச்சிட்டு அனைவருக்கும் வழங்கலாம் என்பது நம் எண்ணம். யார் பெரியவர்? என்னும் இகோ ப்ரச்சனை இதை அறிவதால் விலகும் என்றும் நம்புகிறோம். சடங்கு நடக்கும் போதே பல இடையூறுகள் உள்ளன.*


*அதில் முக்யமாக தம்பதிக்கு ஆசீர்வாதம் செய்வது. சற்று பொறுமையுடன் ஆசீர்வதிக்கலாம். திருமணங்களில் ஆசீர்வாதம் செய்ய வருவோர் சற்று பொறுமையுடன் இருந்து ஸப்தபதி முடிந்தபின் ஆசீர்வாதம் செய்வது நல்லது என்பதையும் வலியுறுத்துகிறோம். கேளிக்கைகளுக்கும், ஆடம்பரங்களுக்கும் முக்யத்வம் தராமல் சடங்குகளுக்கு மக்கள் ஆதரவு தர வேண்டும் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்கள் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜய ! ஜய ! சங்கர ! ஹர! ஹர !சங்கர!*

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## மத விஷயங்களில் மக்கள் ஆதரவே மூலதனம்



மேற்சொன்னபடி மதத்தை வளர்ப்பதற்கான பணிகளின் செலவில் ஒரு பங்கைத்தான் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென விரும்புகிறோமேயன்றி முற்றிலும் அரசாங்கமே செலவழிக்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. அப்படிச் செய்தால் அப்போது இப் பணிகளுக்காக மக்கள் செலவிடுவதென்பது நின்றுவிடும். அது கூடாது. ஏனெனில் மத விஷயங்களில் மக்களின் ஆதரவே மூலதனம். உடலுழைப்பாக மட்டுமின்றி, திரவியத் தியாகமாகவும் அவ்வாதரவை அவர்கள் தர வேண்டும். அரசாங்கம் மட்டுமே செலவிடுவது என்றால் அப்போது மக்களின் அக்கறையும் ஈடுபாடும் குறைந்து அவர்களுக்கு மெத்தனம் ஏற்பட்டுவிடும். எனவே அரசாங்கம், மக்கள் ஆகிய இரு சாராரும் பங்கு கொண்டே மதாபிவிருத்திக்கான பணிகள் நடைபெறவேண்டும்.

## மதச் சுதந்திர உரிமையும் மதமாற்றமும்

மேற்சொன்ன மதாபிவிருத்தியில் மதப் பிரசார விஷயமாக ஒரு கிளையம்சத்தைத் தெளிவுபடுத்த விரும்புகிறோம். கிளை எனினும் இதுவே மேற்சொன்ன எல்லா அம்சங்களையும் கிளைகளாகக் கொண்ட அடிமரமும் வேருமாக மதிக்கத்தக்க ஆதாரமான விஷயமாகும்.

அதாவது அரசியற் சுதந்திரம் பெற்ற நம் நாட்டு மக்கள் யாவரும் மதச் சுதந்திரமும் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தின் மீதுதான் மேற்சொன்ன யாவுமே கூறப்பட்டன. அதற்கு நமது அரசியல் நிர்ணயச் சட்டம் நிச்சயமாக உறுதி கூறும் என்ற நம்பிக்கையின்

மீதே கூறப்பட்டன. இது ஒருவர் தமக்கு விருப்பமான மதத்தைத் தழுவியிருக்கும் சுதந்திரத்தைப் பெற்றிருப்பதற்குச் சட்டபூர்வமாக உரிமை வழங்குவதேயாகும். அவ்வாறு ஒருவருக்கு விருப்பமானது என்பது மிக மிகப் பெரும்பாலும் அவர் எம்மதத்தில் பிறந்தாரோ அதுவாகத்தானிருக்கும். உடன் வாழும் பெற்றோர், சகோதரர் ஆகியோரைப் போலப் பிறந்த காலம் தொட்டுப் பழகிய அம்மதமே ஒருவருக்கு விருப்பமானதாக இருப்பதே பொது இயற்கை. எனினும் சிலருக்கு வேற்று மதத்தில் விருப்பம் ஏற்படலாம். அல்லது எம்மதத்தையும் விரும்பாத நிரீச்சுவர வாதத்தில் விருப்பம் ஏற்படலாம். எவ்வாறாயினும், அவரவரும் மதம் குறித்த எந்த விருப்பத்தையும் பற்றி ஒழுகுவதற்கு உரிமையளிப்பதே மதச் சுதந்திரமளிப்பதாகும்.

சாத்திரப்படி தாய்மதத்தைத் துறப்பது பெற்ற தாயைத் துறப்பது போன்ற பாபமாகவே கருதப்படுகிறதெனினும், சாத்திர வழிகளைச் சந்தர்ப்பத்தை ஒட்டி மாற்ற இடம் தராமல் உள்ளபடி இரட்சிப்பதே மதத் தலைவர்களான எம் போன்ற மடத்தலைவர்களின் கடமையெனினும், தற்போதுள்ள ஜனநாயக - தனிநபர்ச் சுதந்திரங்களின் தீவிரமான சூழ்நிலையில் அரசாங்கப் பூர்வமாக இந்நாட்டில் சாத்திர வழியைத்தான் அமல்படுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு இடமே இல்லை என்று ஆகிவிட்டதால், இவ்விஷயத்தில் எவரும் தமது விருப்பப்படி எந்த மதத்தையும் தழுவ சுதந்திரம் உண்டு என்று மாற்றுக் கருத்தை மதித்துத் தானாக வேண்டியுள்ளது என்ற நிர்ப்பந்த நிலையிலேயே இவ்வாறு கூற முற்பட்டோம்.

பிரஜைகள் மதச் சுதந்திரம் பெற்றுள்ள இந்நிலையில், எல்லா மதத்தலைவர்களும் மதாபிமானிகளுக்கும் தத்தமது மதங்களின் கொள்கைகளையும், வழிபாடு முதலான செயலுருவிலான வழிமுறைகளையும் தாங்கள் பின்பற்றுவதோடு, பிறருக்கும் பரப்பிப் பிரசாரம் புரியவும் சுதந்திரமான சட்டவுரிமை இருத்தல் வேண்டும். அந்தப் பிரசாரம் அவர்கள் தங்களுக்கே அதில் ஆழ்ந்த ஈடுபாடும் அநுபவ அறிவும் ஏற்படுத்திக் கொள்வதற்கும், அம்மதஸ்தர்களாகவே உள்ள பிறருக்கும் அவற்றை ஊட்டவும், மொத்தத்தில் பரஸ்பரம் மதத்தினால் தாங்களும், தங்களால் மதமும் இரட்சணை பெறுவதற்குப் பேருதவி புரிவதாகவும் இருக்க வேண்டும்.

## பிரசாரமும் துஷ்பிரசாரமும்

இப்பிரசார விஷயத்தில்தான் ஒருவர் தமது விருப்பப்படி ஒரு மதத்தைத் தேர்ந்தெடுப்பதில் மதமாற்றம் என்ற விஷயம் வருகிறது. பிரசாரம் என்பதைக் கூர்ந்து

கவனத்துடன் கண்குத்திப் பாம்பாகக் கவனித்து, துஷ்பிராசாரமாகாமற் காப்பாற்றுவது தான் விஷயம்.

பிரசாரம் செய்கையில், ஒரு மதக் கொள்கைகள் முதலியன அனைவருக்குமான பொதுச் சமுதாயத்தின் முன் வைக்கப்படுகின்றன. ஒரு மதத்தின் நூல்கள், சொற்பொழிவுகள் முதலியவற்றைப் பிற மதத்தினரும் படித்தும் கேட்டும் அதனைப் பற்றி அறிய முடிகிறது. அவ்வாறு அறிந்ததில் அம்மதத்தின் கொள்கைகள், அநுஷ்டான முறைகள் முதலியவற்றில் சுயமாக விருப்பம் ஏற்பட்டு பிற மதஸ்தர் ஒருவர் அதில் சேர்வதுதான் உண்மைத்தன்மை உடையதாகும். ஒருவருடைய சுயமான விருப்பம் ஒன்றின் மீது மட்டுமேதான் அவ்வாறு தாய் மதத்திலிருந்து பிற ஒன்றுக்கு மாறுவது உண்மைத்தன்மை உடையது.


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# அனைவரையும் ஒன்று சேர்க்கும் கடவுள் வழிபாடு

கடவுளிடம் எப்படிப் பக்தி செலுத்த வேண்டும், கடவுளிடம் எப்படிப் பேச வேண்டும், எப்படிப் பழக வேண்டும், அன்பு காட்ட வேண்டும் என்ற விளக்கங்களைச் சொல்வது தேவாரம், திருவாசகம், திருப்புகழ்.

ஆகவே, தோத்திரங்களைப் படிப்பது கண்ணீர் மல்கி, மனதெல்லாம் குளிர்ந்து இறைவனை நேரில் பார்க்கும் அனுபவத்தைக் கொடுக்கும்.

**'அம்மையே அப்பா, ஒப்பிலா மணியே'** என்பது தேவார ஸ்தோத்திரம். சாத்திரங்கள் வேறு; ஸ்தோத்திரங்கள் வேறு.

எப்படி வாழ வேண்டும் என்பது சாத்திரங்கள். எப்படி வழிபட வேண்டும் என்பது தோத்திரங்கள். இவைகளைக் கொண்டு தான் நாம் பாரம்பரியமாக ஒரு கலாச்சாரத்தைக் கடைப்பிடித்து வருகிறோம்.

ஒரு தனிமனிதன் பிரார்த்தனை செய்தால்கூட உலகம் முழுவதும் பலன் கிடைக்கும் என்பதைச் சொல்வதுதான் நம் இந்து மதத்தின் தத்துவம்.



திருஞானசம்பந்தர், **'வையகம் துயர் தீரவே ....'** என்று பாடுகிறார்.

தாயுமானவர் சுவாமிகள், **'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல், வேறு ஒன்று அறியேன் பராபரமே'** என்று தனது அனுபவத்தைச் சொல்கிறார்.

மாற்று மதத்தினர் இப்படி எல்லாம் சொல்ல மாட்டார்கள். தங்கள் சாமி தங்களுக்கு மட்டும்தான் அருளவேண்டும் என்றுதான் அவர்கள் வேண்டுவார்கள்.

ஆகவே, நாம் எல்லாம் பரம்பரையாக வந்தவர்கள். அந்தப் பரம்பரை முறைப்படிதான் நம் கலாச்சாரம் இன்றும் இருந்து வருகிறது. நம் முன்னோர் எல்லாம் தமிழிலேயே நமக்கு தோத்திரப் பாடல்களைக் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய முன்னோர்கள் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம்,

திருப்புகழ் போன்ற தமிழ்ப் பாடல்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

ஔவைப் பிராட்டியார் ஒரு சமயம் கயிலாயம் சென்று பரமேஸ்வரனைத் தரிசிக்க வேண்டும் என்று விரும்பினார். அதே சமயத்தில் சேரமான் பெருமான் நாயனார் தானும் இறைவனைத் தரிசிக்க விரும்புகிறேன் என்று சொன்னார். இருவரும் போகலாம் என்று ஒன்றாகவே கிளம்பினார்கள். அந்த நேரத்திலே விநாயகப் பெருமானை வழிபாடு செய்யும் நேரம் வந்துவிட்டது.

ஔவைப் பிராட்டியார் சேரமான் பெரு மானிடம், 'நான் விநாயகரை வழிபடும் நேரம் வந்து விட்டது. அவரை வழிபட்டு விட்டுத்தான் வருவேன்' என்றார்.

'இல்லை வேகமாகச் செல்ல வேண்டும். அதனால் வாருங்கள் போய்விடலாம்' என்றார் சேரமான்.

'இல்லை. நீங்கள் வேண்டுமானால் முன்னால் செல்லுங்கள். நான் பிறகு வருகிறேன்' என்றார் ஔவைப் பிராட்டியார்.

'நீங்கள் மட்டும் எப்படித் தனியாக வருவீர்கள்?' என்று கேட்டார் சேரமான். 'நான் கடவுள் வழிபாடு பண்ணுகிறேன். எப்படியாவது அவர் என்னை அங்கு கொண்டுவந்து சேர்த்துவிடுவார்' என்று கூறினார்.

நம்பிக்கை அந்த அளவுக்கு இருந்தது ஔவைப் பிராட்டிக்கு. பிறகு சேரமான் பெருமான் தனது குதிரையிலேயே கைலாயம் சென்று விட்டார்.

ஔவைப் பிராட்டியார் விநாயகரை வழிபாடு செய்து **'விநாயகர் அகவல்'** எழுதி விட்டு, ஆராதனையும் செய்து விட்டு, கற்பூரம் காட்டிக் கண்களில் ஒத்திக் கொண்டு, நமஸ்காரம் செய்துவிட்டுப் பிரார்த்தனையும் செய்தார்.

'உனக்கு தினமும் பூஜை பண்ணுவது என்னுடைய வழக்கம். அதுபோல இன்றைக்கும் பூஜை பண்ணுகிறேன். நான் கைலாயம் செல்ல வேண்டும். என்னோடு வரவேண்டியவர் முன்னதாகவே புறப்பட்டுப் போய்விட்டார். இனி என்னை கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு' என்றார்.

உடனே விநாயகர் என்ன செய்தார் தெரியுமா?

தனது துதிக்கையினாலே அப்படியே ஔவைப் பிராட்டியாரை எடுத்து 'லிப்டில்' கொண்டு போவது போல கைலாயத்திலே கொண்டு போய்ச் சேர்த்து விட்டார்.

அவருக்குப் பிறகுதான் சேரமான் பெருமான் குதிரையில் வந்து கொண்டு இருந்தார். ஆனால், அவருக்கும் முன்னதாகவே ஔவையார் கடவுள் அருளால் கைலாயம் போய் சேர்ந்து விட்டார்.

கடவுள் அருள் இருந்தால் லிப்ட்டுக்கு மேல் லிப்ட்டாக, கைலாயம் என்ன, வைகுண்டம் என்ன, வேறு எங்கு வேண்டுமானாலும் நாம் விரும்பிய இடத்திற்கு போய்ச் சேர முடியும்.

அந்த அளவுக்கு இறைவன்மீது நமக்கு அளவு கடந்த நம்பிக்கை வேண்டும். ஆழமான நம்பிக்கை இல்லாவிட்டால் எதுவுமே நடக்காது.

அந்தக் காலத்திலேயே, அப்பர் பெருமானைத் துன்புறுத்திய மாற்று மதத்தினர் இருந்தார்கள். இந்து சமயத்திற்கு, இந்த வைதீகச் சமயத்திற்குப் புறம்பான மாற்று சமயத்தினர் அப்போது இந்தியாவில் இருந் தார்கள். அவர்கள் நம் அடியார்களை என்னென்ன பாடுகள் படுத்தினார்கள் என்பது தெரியுமா? வரலாற்றைப் பார்த்தால் தெரியும்.

அப்பர் பெருமானை சுண்ணாம்புக் காளவாயில் போட்டுச் சுட்டார்கள். சமுத்திரத்திலே கல்லைக் கட்டிப் போட்டார்கள். அப்போதெல்லாம் அவர் என்ன சொன்னார் தெரியுமா?

**‘என்னைக் காப்பது நமச்சிவாயவே’** என்று நம்பிக்கையோடு கூறினார். அப்போது கட்டிப் போட்ட கல்லும்கூட சமுத்திரத்திலே மிதந்துவந்து அவரைக் கரையேற்றி விட்டது. சுண்ணாம்புக் காள வாய்கூட அவருக்கு குளிர்ச்சியாக மாறியது என்பதைப் பார்க்கிறோம்.

அதேபோல மணிக்கவாசகர் சுவாமிகளையும் படாதபாடு படுத்தினார்கள். அவரைக் கொளுத்தும் வெயிலில் வைகை ஆற்று மணலில் தள்ளித் தண்டனை கொடுத்தார்கள்.

சிவன் அருளால் திடீரென்று வெள்ளம் கரை புரண்டு வந்து அந்த மணலைக் குளிர வைத்தது என்ற வரலாற்றைப் பார்க்கிறோம். இதெல்லாம் பழங் காலத்துக் கதையல்ல.

இந்த கலியுகத்தில் நடந்த கதை! இதுபோன்ற அதிசயங்கள் பழங்காலத்திலும் உண்டு. இந்தக் காலத்திலும் உண்டு.

மாற்று சமயத்தினர் நம் அடியார்களை எவ்வளவோ பாடுகளை படுத்தினர்கள் என்பது நம் எல்லோருக்குமே தெரியும்.

நம்முடைய சமயத்திலேயே நாம் இருந்தால் என்றைக்குமே சௌக்கியமாக இருக்கலாம். கீதை கூடச் சொல்கிறது–

**‘பரதர்மம் பயா வஹா...’**

பரதர்மத்தைக் கடைப்பிடித்தால் அது பயத்தைக் கொடுக்கக் கூடியது என்று நாம் வைதீக இந்து சமயத்தை மட்டுமே கடைப் பிடிக்க வேண்டும்.

**‘வேதம் சிவாஹமம்’** என்று சொல்வார்கள். வேதமும், சிவமும் ஒரே அடிப்படையான கொள்கையை உடையது.

தேவாரம் பாடிய மூவர்களும், இந்த வேத சிவாஹமத்தைத் தான் கொண்டு வந்தார்கள்.

இந்து சமயம் என்ற ஆலமரத்தின் கீழே, சைவம், வைணவம் என்ற இரு கிளைகளைக் கொண்டு வந்தார்கள். வழிபாட்டு முறைகளையும் சிவம், வைணவம் என்றுகூட வைத்துக் கொண்டார்கள்.

ஆனால், இந்து சமயம் பொதுவான ஒன்றுதான். சமயம் என்ற பிரிவுகள் சைவ சமயம், வைணவ சமயம் என்று எதுவும் கிடையாது. ஒரே மரத்தில் இரண்டு கிளைகளைப் போலத் தான் இந்து சமயத்திலே சைவமும், வைணவமும் உள்ளது. இரண்டுக்கும் வேறுபாடு இல்லை.

ஒவ்வொரு சிவன் கோயிலிலும் மூலவர் கோபுரத்திற்குப் பின்புறம் பிரம்மா, விஷ்ணு, தட்சிணாமூர்த்தி மூவரும் இருப்பார்கள். லிங்கோத்பவரும் இருப்பார்கள்.

அதேபோல ஒருகாலத்தில் பெருமாள் கோயிலிலும் சிவமூர்த்திகள் இருந்தது. இப்போது இல்லை. போய்விட்டது.

ஆகமப் பிரகாரம் மூன்று மூர்த்திகளையும் ஒன்றாக வைக்க வேண்டும். ஆகவே நம்முடைய சமயப்படி பல கடவுள் என்பதற்கு அர்த்தம் கிடையாது. கடவுள் ஒருவர்தான், வடிவங்கள் தான் வேறு வேறு. ஒரே ஆண்டவன்தான்; ஒரே ஆத்மாதான் இத்தனைக்கு உள்ளேயும் ஊடுருவிக் கொண்டு இருக்கிறது. எல்லோருடைய உள்ளத்திற்கு உள்ளேயும் இருந்து கொண்டு எல்லாவற்றையும் நடத்தி வைப்பது யார்? இறைவன்தான்! அதை வைத்துத்தான் மாணிக்கவாசகர் : -

**'அவன் அருளாலே அவன்தாள் வணங்கி...'** என்று சிவபுராணத்திலே குறிப்பிடுகின்றார். அந்த ஆண்டவன் தான் நம்மையெல்லாம் நல்ல பாதைக்கு நடத்திச் சென்று இயக்குகிறார்.

நாம் ஆபீஸ் போகும்போது ஒரு ஆடை, வீட்டுக்கு வந்தபிறகு ஒரு ஆடை போடுவது இல்லையா? அது ஆள் மாறுவது அல்ல. ஆள் ஒரே ஆள்தான். ஆடைதான் வேறு.

அதுபோலத்தான் ஒரே இந்து சமயம். பலப்பல கடவுளர்களைக் கும்பிட்டாலும், மனதுக்குள்ளே கடந்து சென்று குடியிருப்பவர் ஒரே ஒரு கடவுள் தான்.

ஒரே கடவுள்தான் நமக்கு. பல கடவுள் இல்லை. விநாயகர், முருகன், மாரியாத்தா எல்லாமே ஒன்று தான். இந்து சமயத்திற்கு முக்கியமானது விக்ரக வழிபாடு.

'விநாயகர், முருகன், சிவன், விஷ்ணு, அம்பாள், சூரியன் என்று அறுவகைச் சமயம் மூலம் வேதாந்தத்தை அனுபவிக்கலாம் என்று ஆதிசங்கரர் சொல்லி இருக்கிறார்.

ஒரு கற்கண்டு இருக்கிறது. அது இனிப்பாக இருக்கிறது. வாயில் போட்டுப் பார்த்தால்தான் இனிப்புத் தெரியும் என்பது ஒரு அனுபவமாக இருக்கிறது.

அனுபவம் என்பது நம் மனது அனுபவிப்பது. அதற்கு வடிவம் நாம் காண்பது. அப்படித்தான் விக்கிரக வழிபாடும் வந்தது.

நம்முடைய இந்து சமயத்திலே அனுபவ ரீதியிலே, ஞான நிலையிலே, மோட்ச நிலையிலே ஒன்றுசேர, உருவ வடிவத்தை வழிபாடு செய்துவர வேண்டும். அந்த வழிபாட்டைத்தான் இந்து சமயம் வலியுறுத்துகிறது.

அதற்காகத்தான் கோயில்களையும் வைத்திருக்கிறோம். ஒவ்வொரு ஊரிலும் ஒரு சிவன் கோயில், ஒரு பெருமாள் கோயில், ஒரு மாரியம்மன் கோயில் வைத்திருக்கிறோம். இந்தக் கோயில் மூலமாகத்தான் நம்முடைய வாழ்க்கையைச் சரிபண்ண முடியும்.

இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது கோயில்கள். அறுபத்து நான்கு கலைகள் கொண்டது கோயில்கள். மற்ற எந்த மாற்று சமயத்திலும் அறுபத்து நான்கு கலைகள் கிடையாது.

வாத்தியக்காரன், ஓதுவார், பூக்காரர், சிற்பம் செய்பவர் என்று எல்லாக் கலைஞர்களையும் உள்ளடக்கியது நம் இந்து சமயக் கோயில்கள். அங்கே எல்லோருக்கும் இடம் உண்டு. அந்தக் கோயில்கள் மூலமாகத்தான் 64 கலைகளும் வளர்க்கப்பட்டன.

தமிழ்ச் சமுதாயமும், இந்துச்சமயமும் ஒன்று தான். இந்தியக் கலாச்சாரம், தமிழ்க் கலாச்சாரம், இந்தியப் பண்பாடு, தமிழ்ப் பண்பாடு ஆகியவையெல்லாம் ஒன்றுதான். பண்புகள்தான் வேறுபடுகின்றன.

நாம் எல்லோரும் ஒற்றுமையாக இருந்து- **‘திரை கடல் ஓடியும் திரவியம் தேடு’** என்றபடி வெளிநாடுகளுக்கே போனாலும் நம் சமயக் கொள்கைகளை விட்டு விடாமல் கலாச்சாரப் பண்பாட்டைக் காப்பாற்றி வர வேண்டும்.

நம்முடைய குழந்தைகளுக்கு கலாச்சாரத்தைப் போதிக்க வேண்டும்.

இப்போது நம்முடைய திருக்கோயில்களிலே ஞாயிற்றுக் கிழமைகளில் சமயப் பாடல் வகுப்புகளை ஆரம்பித்திருக்கிறோம். அதற்கு நிறைய குழந்தைகள் வருகிறார்கள்.

எல்லாக் கோயில்களிலும் சமயப்பாடல் வகுப்புகள் நடைபெற வேண்டும். அவர்களுக்குப் புத்தகங்கள் வேண்டுமானால் சொல்லுங்கள். நாங்கள் மாதிரிப் பிரதிகளை அனுப்பி

வைக்கிறோம். அதுபோல அச்சு இட்டு அவர்களுக்கு வழங்குங்கள்.

தமிழ் அறிவு வளரவேண்டும். சமய அறிவும் வளர வேண்டும். தெய்வீக அறிவும் அவர்களுக்குக் கண்டிப்பாக வளர வேண்டும்.

இந்த மூன்று அறிவும் ஒன்று சேர்ந்தால்தான் வாழ்க்கையை அவர்கள் நன்கு அனுபவிக்க முடியும்.

தாய் நாட்டையும், கலாச்சாரத்தையும் மறக்காமல் வாழவேண்டும். சம்பாத்தியம் தேவைதான். ஆனால் தெய்வத்தை அனுபவிப்பதுதான் வாழ்க்கை.

சம்பாத்தியதை சமயத்தை காப்பதற்கும்- சமுதாயத்தைக் காப்பதற்கும், கலாச்சாரத்தைக் காப்பதற்கும் செலவிட வேண்டும்.


எல்லோரும் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும், தெய்வ பக்தியுள்ளவர்களாகவும், பரஸ்பரம் ஒத்துழைப்பும், சகாயம் செய்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

எல்லாரும் வாழ்வாங்கு வாழ வாழ்த்தி ஆசிர்வதிக்கிறோம்..

**‘வையகம் துயர் தீர்க்கவே’**

ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...


(தொடரும்)



# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஶ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

### சங்கரா இன்டர்நேஷனல் ஸ்கூல் திருவொற்றியூர், சென்னை விஜயம் - 16/06/2024



**ஸ்ருதி ஸ்மிருதி புராணானாம் ஆலயம் கருணாலயம்**
**நமாமி பகவத் பாத சங்கரம் லோக சங்கரம்**

**அபார கருணா சிந்தும் ஞானதம் சாந்தரூபினம்**
**ஶ்ரீ சந்த்ரசேகர குரும் ப்ரணமாமி முதாந்வஹம்**

**தேவே தேஹே ச தேஸே ச பக்த்யாரோக்யஸுகப்ரதம்ந**
**புதபாமரஸேவ்யம் தம் ஶ்ரீஜயேந்த்ரம் நமாம்யஹம்**

**நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!**
**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**

இந்த சங்கரா ஸ்கூல்க்கு ஏற்கனவே வந்திருக்கிறோம் ஒரு இருபது வருஷத்திற்க்கு முன்பாக இந்த இடத்திற்கு வந்து, அப்பொழுது தான் மேடை எல்லாம் கட்டிண்டு இருந்தாங்க. பூச்சு வேலை நடந்திண்டு இருந்தது. அச்சமயத்தில் இங்கு சந்திர மௌலீச்வர பூஜையை இங்கு விசேஷமாக நடத்தி, நம்முடைய ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளின் ஆசியும் பெற்று, இந்தப் பள்ளிக்கூடமானது இந்தப் பகுதியிலே தற்போது மிக சிறப்பாக வளர்ந்து, 2200 மாணவி, மாணவர்களுடன் சிறப்பாக கல்வி சேவை செய்து கொண்டு வருகிறது. அப்படி இந்த ரங்கநாதன் குடும்பத்தின் மூலமாக செயல்படும் இந்த பள்ளிக்கூடமானது - மக்களுக்கு கல்வி என்பது தேவை. அந்தக் கல்வி என்பது கலாச்சாரத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். நம்முடைய கொன்றை வேந்தன், ஆத்திச் சூடி, பிரபந்தங்கள், திருப்புகழ் இது போன்று தமிழ் இலக்கியங்களில் என்ன நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டு இருக்கின்றதோ, அது போன்ற கருத்துக்களை மக்கள் மனதிலே பதிய வைக்குமாறு இருக்க வேண்டும் கல்வித் திட்டம்.

அதற்காக நமது புதுப் பெரியவர்கள் ஶ்ரீ ஶ்ரீ ஶ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஒரு புஸ்தகத்தையே வெளியிட்டார்கள். அறவழி வாசகம் என்பதாக அ - அப்பர்,

எ - எறிபத்தர் இது போன்று தமிழையும் சொல்லிக் கொடுத்து, தமிழர்களின் தெய்வீக வரலாறுகளையும் மாணாக்கர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அறவழி வாசகம் என்ற புத்தகத்தை வெளியிட்டார்கள். ஆங்கிலத்தின் மூலமாகவும், படிப்பது ஆங்கிலமாக இருந்தாலும், எண்ணம் நமது பக்தியை சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதற்காக - A for Arjuna, B for Bheeshma, C for Cauvery, D for Durga, E for Ekalavya, L for Lakshmi, S for Saraswathi, N for Narada - இது போன்று A to Z இந்த ஆங்கிலக் கல்வியையும், நம்முடைய பாரத தேசத்தின் கலாச்சாரத்தின் பின்னணியோடு நாம் படித்தால், இந்தியா என்பது முன்னணியில் இருக்கும். அதற்குத் தேவை கலாச்சார பின்னணி.

இந்தியா முன்னணியில் இருக்க வேண்டுமானால், இந்தியாவின் கலாச்சாரத்தின் பின்னணியாக, முக்கிய கருத்தாக ஆன்மீகம் இருக்க வேண்டும். நம்முடைய ஆன்மீகம் தான், மனிதனுடைய வாழ்க்கை முறையை சொல்லித் தருகிறது. மனிதன் மனிதனாக வாழ்வது எப்படி? மனிதன் நல்ல மனிதனாக வாழ்ந்து, தெய்வமாக வளர்வது எப்படி? என்பதாக இந்த தெய்வீக சக்தியை மனதில் உணர வைப்பது எப்படி? உணரவைப்பது, உணர்த்துவது நமது இந்து சமயம்.

ஆகவே இந்து சமயம் என்பது, எண்ணத்தின் காரணமாக வளர்ந்தது. எண்ணிக்கை வளர்வது என்பது வேறு. எண்ணங்கள் வளர்வது என்பது வேறு. அந்த எண்ணங்களை வளரச் செய்வது நமது இந்து சமயம். ஆகவே இந்து சமயமானது உயர்ந்த நாகரீகத்தை தெரியப்படுத்துகிறது. உயர்ந்த நாகரீகத்தின் மூலமாக, மனித இலக்கணத்தை தெளிவு படுத்துகிறது. மனிதர்கள் மனிதர்களாக வாழ்ந்து, தானும் சிறந்து விளங்கி, பிறருக்கும் உபத்திரம் செய்யாமல், பிறருக்கு கஷ்டத்தை அளிக்காமல், பிறருக்கு தீங்கை விளைவிக்காமல், அவர்களும் நன்றாக இருந்து, நாமும் நன்றாக இருந்து, உலகம் சிறக்க பாடுபடுதல் தான் நமது இந்து மதத்தின் சித்தாந்தம்.

ஆகவே, அந்த இந்து சமயத்தை அந்தக் காலத்திலே ஒவ்வொரு வீட்டிலும் சொல்லிக் கொடுத்தார்கள் . பாட்டு வழியாகச் சொல்லிக் கொடுத்தார்கள் , வழிபாட்டு வழியாகச் சொல்லிக் கொடுத்தார்கள். மரம், செடி,கொடி மூலம் சொல்லிக் கொடுத்தார்கள். ஆற்றுத் திருவிழா மூலம் சொல்லிக் கொடுத்தார்கள், தெப்பத் திருவிழா மூலம் சொல்லிக் கொடுத்தார்கள். மரத்தடியில் உட்கார வைத்து சொல்லிக் கொடுத்தார்கள். நுகத்தடி மூலம் சொல்லிக் கொடுத்தார்கள். நாலடி செய்யுள்கள், பாட்டுக்கள் மூலமாக சொல்லிக் கொடுத்தார்கள். காலடி பக்தியின் மூலமாகச் சொல்லிக் கொடுத்தார்கள். வரும் போது

கூட, காலடி என்ற ஒரு ஊர் பார்த்தோம். காலடி என்பது ஆதிசங்கரரின் ஊர். யாரோ இங்கே பக்கத்து ஊரில் காலடி என்று பெயர் வைத்து இருக்கிறார்கள். இப்படி இந்து சமயம் என்பது இயற்கை ஒட்டிய வாழ்க்கை முறையை போதிக்கக் கூடிய சமயம்.

இன்றைக்கு ஒரு மஞ்சள், ஒரு வேப்பிலை, இதற்கும் நம்முடைய உரிமையை தலைமுறை தலைமுறையாக நாம் பின்பற்றி வந்த விஞ்ஞான அணுகு முறையை, வேறு யாராவது வெளிநாட்டைச் சார்ந்தவர்கள் patent (காப்பு) உரிமையை செய்து விட்டால், அவர்களிடத்தில், சென்று அனுமதி பெற்று நாம் செயல்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படி நம்முடைய சொத்தை, நம்முடைய பாரம்பரியத்தை , நம்முடைய் பெருமைகளை நாமறியாமல், கடைபிடிக்காமல், பிரச்சாரம் செய்யாமல், நாம் வேறு விதத்திலே ஒரு முனிவர்களாக, ஒதுங்கியவர்களாக, உலக வாழ்க்கையிலிருந்து ; எதிலே நாம் நம்முடைய பற்றை வளத்துக் கொள்ள வேண்டுமோ, அதிலே பற்றற்றவர்களாக, எதிலே பற்று தேவை இல்லையோ, அதிலே பற்றுள்ளவர்களாக இப்படி நாம் நம்மை மாற்றிக் கொண்டு, நாம் ஏமாறிக் கொண்டு வருகிறோம்.

ஆகவே, நம்முடைய கலாச்சாரத்தை நாம் பின்பற்றுவதற்கு, கல்வியிலே தாய் மொழியையும் சொல்லித் தர வேண்டும். தாய் மொழியில் பேசக் கூடிய பழக்கத்தை குழந்தைகளுக்குச் சொல்லித் தர வேண்டும். அதோடு சேர்ந்து , இங்கீலீஷ், அதை இங்கீலீஷ்காரனை விட இந்தியாவில் நன்றாக பேசுகிறான் என்ற அளவிற்கு ஒரு இருநூறு வருஷத்திலே, ஆங்கில மொழியை நம்மவர்கள் சிறப்பாகக் கையாண்டு, அதிலே தேர்ச்சி பெற்று இருக்கிறார்கள். அதனால், அதற்கு விசேஷ முயற்சி என்பது தேவையில்லை. அது இயற்கையாக வந்து கொண்டு இருக்கிறது. முயற்சி தாய் மொழியை காப்பாற்றத் தேவை.

அது போன்று நம்முடைய வரலாற்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பலி பீடம் என்றால் என்ன ? த்வஜ ஸ்தம்பம், கொடி மரம் என்றால் என்ன ? அர்த்த மண்டபம் என்றால் என்ன ? மஹா மண்டபம் என்றால் என்ன ? கர்ப கிரஹம் என்றால் என்ன ? உற்சவ விக்ரஹம் என்றால் என்ன ? வாகனங்கள் என்றால் என்ன ? காப்பு கட்டுவது என்றால் என்ன ? திருவிழாக்கள் என்றால் என்ன ? ஜாத்திரை என்றால் என்ன ? கங்கம்மா ஜாத்திரை பெரிய பாளையத்து அம்மன் உற்சவம் என்றால் என்ன ? இது போன்ற நம்முடைய இந்து சமயம் சார்ந்த பண்டிகைகள் - சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை இருக்கக் கூடிய பண்டிகைகளை- மகர சங்கராந்தி, பொங்கல், தீபாவளி, காரடையான் நோம்பு, இன்னும் பல விரதங்கள் இருக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம்- காலேண்டர்

நம்முடைய மக்களுக்குத் தெரியும்- ஜனவரி , பிப்ரவரி என்று தெரியும். ஆனால், சித்திரை - சித்திரா பௌர்ணமி, வைகாசி - வைகாசி விகாசம், ஆனி - ஆனித் திருமஞ்சனம், ஆடி - ஆடிப் பெருக்கு, ஆவணி -ஆவணி மூலம், ஐப்பசி - ஐப்பசி பூரம், கார்த்திகை - கார்த்திகை தீபம், மார்கழி - வைகுண்ட ஏகாதசி, திருவாதிரை, தை - தைப் பூசம், மாசி - மாசி மகம், பங்குனி - பங்குனி உத்திரம், இது போன்று தமிழ் மாதம் சார்ந்த திருவிழாக்களை; அது போன்று அற வழியிலே - அறம் செய்ய விரும்பு என்பது தான் நம்முடைய பழமொழி, **ஆலயம் தொழுவது சாலமும் நன்று** என்பது நம்முடைய பழமொழி. ஔவையார், சித்தர்கள் - என்று எத்தனையோ பேர் பல பாடல்களை பாடி இருக்கிறார்கள். இன்று கருத்துப் பாடல்கள் என்று எதையோ தனியாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறோம். ஆனால் உண்மையான தெய்வீகக் கருத்தை தெரிவித்தவர்கள் சித்தர்கள்.

கருவூர் சித்தர், திருமூலர் திருமந்திரம் - இது போன்று தமிழில் இருக்கும் நல்ல செய்யுள்கள் எல்லாம், ஒரு மாதிரிக்காக குழந்தைகளுக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்து, அதற்காக ஒரு புஸ்தகம் போட்டு இருக்கோம். IITயில் படிப்பவர்கள், படித்து முடித்தவுடன் உடனே வெளிநாட்டிற்கு நிறைய பேர் போய் விடுகிறார்கள். அவர்கள் வெளிநாட்டிற்குப் போய் இந்தியாவைப் பற்றி என்ன சொல்கிறார்கள். நல்ல விதமாக சொல்வதற்காக, இந்தியாவைப் பற்றி தெரிந்த கொண்ட பின்தான் அவர்களை வெளிநாடு போக அனுமதிக்க வேண்டும்.

வேலை கிடைக்கிறது. வியாபாரம் இருக்கிறது என்பதற்காக, பொருளை export செய்வது போன்று மக்களை export செய்யக் கூடாது. அவர்களுக்கு நாம் இந்து மதத்தை பற்றி, இந்தியாவைப் பற்றி நல்ல விஷயங்களை சொல்லிக் கொடுத்து, அவர்கள் வெளிநாடு செல்ல அனுமதி கொடுத்து அனுப்பினால், அவர்கள் இந்தியாவைப் பற்றி சரியான கருத்துக்களை தெரிவிப்பதற்கு வசதியாக இருக்கும். அதற்காக ஒரு தனியான புஸ்தகம் போட்டோம். டி.வி.எஸ் அவர்களிடம் சொல்லி ஒரு புத்தகம் போட்டோம். ஔவையார் புஸ்தகம் என்றால் என்ன? கம்ப ராமாயணம் புஸ்தகம் என்ன, காளிதாசன் புஸ்தகங்கள் என்ன - புஸ்தகங்கள் அறிமுகம், சமஸ்க்ருத நூல்கள் அறிமுகம், தமிழில் இருக்கக் கூடிய நீதி நூல்கள் அறிமுகம் அவர்களுக்கு சொல்லிக் கொடுத்து, பிறகு வெளி நாட்டிற்கு அனுப்ப வேண்டும்.

(தொடரும்)

# முகாம் நிகழ்ச்சிகள்

## பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் தலைமையிட நிகழ்ச்சிகளின் தொகுப்பு

**மே 23** - பௌர்ணமி வஸந்தோத்ஸவத்தை முன்னிட்டு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் காஞ்சி காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானத்திற்கு விஜயம் செய்தார்கள்.



**மே 24** - காஞ்சி மஹா சுவாமிகளின் 131வது ஜெயந்தி மஹோத்ஸவ சமயம் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் ஹிந்துயிஸம் என்ற நூல் புராதன மதத்தின் அறிமுகமாக வெளியிடப்பட்டது. இந்நூல் ஆசிரியர் திரு. அரவிந்த் சீதாராமன் என்ற (பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளின்) ஆழ்ந்த பக்தர் இந்நூலை பூஜ்ய ஸ்ரீ சுவாமிகளிடம் சமர்ப்பித்து ஆசிகளையும் பெற்றார்கள். இந்நூலின் முதல் பிரதி ஸ்ரீமதி மஹாலக்ஷ்மி சுப்ரமண்யம் மற்றும் சுப்ரமண்யம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. காஞ்சி மஹாஸ்வாமிகளின் ஜெயந்தி மஹோத்ஸவம் விசேஷ அபிஷேகம், பூஜை, வேத பாராயணம், வித்வத் ஸதஸ் ஆகியவை காலையில் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றன.

மாலை ஜெயந்தி மஹோத்ஸவத்தை முன்னிட்டு சங்கீத சமர்பணம் ஸ்ரீ V. ராஜேஷ் குழுவினரால் மாண்டலின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

**மே** 25 மற்றும் 26ல் ரிக் வேத சபா கோடை முகாம் ஸ்ரீ மடத்தில் நடைபெற்றது.

**மே 26** - இன்று பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் பீடாரோஹண தினம்.

**ஜூன் 1** - திருவள்ளூர் மாவட்டம் தண்டலத்தில் ஸ்ரீ சங்கரா மெட்ரிக்குலேஷன் உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் தளம் கட்டுமானங்கள் பூஜ்யஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் துவங்கி வைக்கப்பட்டது.

**ஜூன்** 3 – சங்கரா பள்ளி மாணவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் உதவித்தொகை, ஏனாத்தூர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா வித்யாலயா சர்வகலா சாலையில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் முன்னிலையில் வழங்கப்பட்டன.

இதற்கு முந்தைய நாளில் (02.6.24) காஞ்சிபுரம் ஸ்ரீ திருவீரட்டானேஸ்வரர் சுவாமி கோவில் கும்பாபிஷேகம் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் அவர்தம் முன்னிலையில் நடைபெற்றது. அதுசமயம் பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணமும் வழங்கி அருளினார்கள்.

**ஜூன் 4**– இன்று மாலை ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் பிரதோஷ பூஜை நடந்தேறியது.

**ஜூன்** 13 – இன்று காஞ்சிபுரத்தில் ஸ்ரீ காளிகாம்பாள் கோவில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. மாலை பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் இத்திருக்கோவிலுக்கு விஜயம் செய்து விசேஷ பூஜைகள் முடிந்த பின்னர் பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

**ஜூன்** 16 – பூஜ்ய ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள் பூந்தமல்லியை அடுத்து உள்ள நசரத்பேட்டையில் ஜெய ஜெய சங்கரா பன்னாட்டு பள்ளியில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தையும், ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஆயுர்வேத கல்லூரி மற்றும் மருத்துவமனை புதிய பொதுப்பிரிவு கட்டத்திற்கும் விஜயம் செய்து அனுக்ரஹித்ததுடன், அங்குள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சிப்பந்திகளுக்கும் அருளாசி வழங்கினார்கள்.

முன்னதாக பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் திருவொற்றியூரில் உள்ள சங்கரா பள்ளிக்கு விஜயம் செய்து பள்ளி மாணவர்கள், சிப்பந்திங்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு அருளாசி வழங்கினார்கள்.

திருவொற்றியூர் சங்கரா காலனி இடத்தில் உள்ள காஞ்சி காமகோடி பீடத்தின் 61வது பீடாதிபதி பூஜ்ய ஸ்ரீ மஹா தேவேந்திர சரஸ்வதி (நான்காவது) சங்கராசார்ய சுவாமிகளின் அதிஷ்டானத்திற்கு விஜயம் செய்தார்கள். மேலும் அவ்விடத்தில் உள்ள ஸ்ரீ விநாயகர் திருக்கோவிலின் கும்பாபிஷேக ஆரம்ப நிகழ்வுகளையும் அனுக்ரஹித்தார்கள்.

ஸ்ரீ மஹா தேவேந்திர சரஸ்வதி (நான்காவது) 61வது பீடாதிபதி அவர்கள் (1746ல்) கேராதன ஆண்டு ஜேஷ்ட மாதம் சுக்ல நவமி திதியில் திருவொற்றியூரில் முக்தியடைந்தார்கள். அதிஷ்டானம் திருவொற்றியூர் ஸ்ரீ வடிவுடையம்மன் சமேத ஸ்ரீ தியாகராஜ சுவாமி திருக்கோவிலுக்கு ½ கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு

ஸ்ரீ ஆதிசங்கர பகவத் பாதாள் சந்நிதியும் உள்ளது.

முன்னதாக காலையில் தண்டையார்பேட்டையில் அமைய உள்ள சங்கர நேத்ராலயா கட்டிடத்தின் பூமி பூஜை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.

சென்னை விஜயத்தை முடித்துக் கொண்டு இரவு காஞ்சிபுரம் திரும்பி ஸ்ரீ மடத்தில் குழுமியிருந்த பக்தர்களுக்கு தரிசனம் அளித்த பின்னர் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரரின் மூன்றாம் கால பூஜைக்கு புறப்பட்டார்கள்.

**ஜூன்** 17- ஸ்ரீ மடத்தில் மாலை ஏகாதசி பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது.

**ஜூன்** 19 - இன்று மாலை ஸ்ரீ மடத்தில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளால் பிரதோஷ பூஜை நடந்தேறியது,

அயோத்தியாவில் உள்ள சங்கர மடத்தில் அயோத்தியா நாளை முன்னிட்டு விசேஷ வேத பாராயணங்கள் மற்றும் ஹோமங்கள் நடைபெற்றன.

**ஜூன்** 21 - ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் பரிபூரண அனுக்ரஹத்துடன் லோக க்ஷேமத்திற்காக புதுடெல்லி ஸ்ரீ காஞ்சி காமகோடி கலாசார கட்டிடத்தில் சண்டி ஹோமம் நடைபெற்றது.

காஞ்சி சங்கர மடத்தில் ஸ்ரீ அனுக்ஞை கணபதி, ஸ்ரீ ஆதி சங்கரர் சந்நிதி மற்றும் ஸ்ரீ சுரேஸ்வராசார்ய சுவாமிகள் சந்நிதிகளின் மண்டல அபிஷேக பூர்த்தி நிகழ்ச்சிகளை பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் அபிஷேகம் மற்றும் தீபாராதனைகளும் நடத்தி அருளினார்கள்.

**ஜூன்** 22 - இன்று பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் முன்னிலையில் ஸ்ரீ பச்சம்பள்ளி சந்தோஷ்குமார் சர்மா என்பவரால் பாகவத பிரவசனம் நடைபெற்றது.

**ஜூன்** 24 - இன்று ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரரின் மூன்று கால பூஜை முடிந்து ஸ்ரீ மடம் முகாம் காஞ்சிபுரம் அருகில் உள்ள ஓரிக்கை என்னுமிடத்தில் பூஜ்ய ஸ்ரீ மஹா சுவாமிகள் மணிமண்டப இடத்திற்கு மாலை புறப்பட்டது. கடந்த மூன்று மாத காலமாக ஸ்ரீ மடத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு ஸ்ரீ சரணர்களின் தரிசனம் கிடைக்கப் பெற்றதுடன், ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரரின் பூஜையையும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்கள்.

**ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர**

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

## क्रीडति वनमाली

**क्रीडति वनमाली गोष्टे क्रीडति वनमाली**
**प्रह्लाद पराशरपरिपाली पवनात्मज जाम्बवदुकूली (क्रीड्ति)**
**पद्माकुचपरिरम्बणशाली पडुचरशासितमालीसुमाली (क्रीडति)**
**परमःअम्सवरकुसुमसुमाली प्रणवपयोरुहगर्भ कपाली (क्रीडति)**

**க்ரீடதி வனமாலீ கோஷ்டே க்ரீடதி வனமாலீ**

ப்ரஹ்லாத பராசரபரிபாலீ பவனாத்மஜஜாம்பவதனுகூலீ (க்ரீடதி)
பத்மாகுசபரிரமபணசாலீ படுசரஸாஸிதமாலிஸுமாலீ (க்ரீடதி)
பரமஹம்சவரகுசுமஸுமாலீ ப்ரணவபயோருஹகர்ப கபாலீ (க்ரீடதி)

*பொருள் : வனமாலையைப் பூண்டவன் விளையாடுகிறான். பசு கொட்டிலில் விளையாடுகிறான். ப்ரஹ்லாதன், பராசரர் இவர்களைப் பரிபாலித்தவன், வாயு குமாரனான ஆஞ்சனேயருக்கும் ஜாம்பவானுக்கும் அருள் பாலித்தவன் விளையாடுகிறான்.*

*ஸ்ரீதேவியின் ஸ்தனங்களைத் தழுவுவோனும், (ஸ்ரீ ராமனாகி மாலி, ஸுமாலி என்னும் அரக்கர்களை நல்ல அம்புகளால்அழித்தவனுமான வனமாலி விளையாடுகிறான்.*

*பரமஹம்ஸ ஸ்ரேஷ்டர்களாகிய புஷ்பங்களை நல்ல மாலையாக்கி கொண்டவன், ப்ரணவம் என்கின்ற தாமரைகளின் நடுவில் மூடப்பெற்று மறைந்திருப்பவனாய் விளையாடுகிறான்.*

# ராஜதரங்கிணி 16

பி. ஆர். கண்ணன்

**தரங்கம் - 8 (தொடர்ச்சி)**

ராஜா ஜயஸிம்மர், லோதனன் போன்ற எதிரிகளிடமும் கண்ணியம், கருணை ஆகியவற்றைக் காட்டினார்.

**நாயாதி வாடவஶிகிக்வதநேந தாபம் ஶைத்யம் ஹிமாத்ரிபயஸா விஶதா ந சாப்தி:।**
**கஶ்சித்கபீரமநஸாம் ஸததம் விஷாதகாலே ப்ரமோதஸமயே ச ஸமோநுபாவ :**
।।2666।।

'ஸமுத்ரம் தன்னுள்ளே எழும் வடவாக்னியின் கொழுந்துகளினாலே உஷ்ணமடைவதில்லை; ஹிமயமலையிலிருந்து வரும் குளிர்ந்த நீரினால் குளிர்வதுமில்லை. அதுபோல் ஆழமான மனதுடையோர் துக்க காலத்திலும், ஆனந்த சமயத்திலும் சமநிலையிலிருப்பர்.'

**தேந திவ்யாநுபாவேந நிர்ஜயோபி ஜயோ மம ।**
**பாந்தஸ்ய கூலவிப்ரம்ஶாத்தீர்தே பதநமுந்நதி : ।। 2904 ।।**

'எனக்கு, அந்த தெய்வீகப் பெருமை மிக்கோனிடம் தோற்றால், அது வெற்றியே. கரையின் உடைப்பினால் தீர்த்தத்தில் விழுந்த யாத்ரீகனுக்கு அதுவே மேல்நிலை.'

**காலோ பலீ வ்யவஹதேர்நநு தத்வஶேந பூர்வாபராசரணவிஸ்மரணேந கஸ்ய ।**
**ஶக்தி: க்ஷிதேர்வஹநகர்மணி யோக்யதாயாம் நிர்தாரணே முரஜிதஸ்து வராஹதாயாம் ।। 3333 ।।**

'பொதுவாழ்வில் காலம் வெகு சக்திவாய்ந்ததே. காலத்தின் வசமாகி, யார்தான் தன் முந்திய, பிந்திய நடவடிக்கைகளை மறக்கவில்லை. விஷ்ணு முதலில் பூமியை சுமந்துவந்தார், பின்னர் வராஹரூபத்தில் அவரே அதைத் தோண்டினார்.'

**விதஸ்தாபுலிநே பாணலிங்கே தேந நிவேஶிதே ।**
**ஜாயதே ஸ்வர்துநீரோத: ஸம்ப்ரரூடவிமுக்ததீ: ।। 3349 ।।**

‘ராஜா ஜயஸிம்மர் விதஸ்தா நதிக்கரையில் (நர்மதையிலிருந்து கொணர்ந்த) பாணலிங்கத்தை நிறுவினார். அது கங்கைக்கரையில் உயர்ந்துவிளங்கிய அவிமுக்தேஶ்வரரை (விஶ்வநாதரை)ப்போல் விளங்கிற்று.’

ஜயஸிம்மர் நிறுவிய மடம் தபோதனர்களால் ப்ரகாசித்தது; அதை தரிசித்தவருக்கு கைலாஸத்தை தரிசிக்கத் தோன்றாது என்கிறார் கல்ஹணர். கஶ்யபாகாரம் என்ற இடத்தில் நீலநதி கிழக்குமுகமாகப் பாய்கிறது. அது கங்கையுடன் போட்டியிடுவது போல் இருந்தது. அங்கு மாடுகள் முதலியவை தாண்ட ஏதுவாக ஒரு பாலத்தைக் கட்டினார் ராஜா. அது ஸம்ஸாரத்திலிருந்து விடுதலையை அளிக்கவல்லதாயிருந்தது. அமரநாதர் குகை செல்லும் வழியிலுள்ள மாமலகேஶ்வரர் ஆலயத்திற்கு தங்கக் கவசம் வழங்கினார். மேலும், ஸோமதீர்த்தக்கரையில் நந்தவனங்கள், குளங்கள் நிறுவி அழகுபடுத்தினார். ராஜாவின் உறவினர்களும், அதிகாரிகளும் ஆலய வளாகங்களில் வசதிகளை அதிகப்படுத்தினர்.

**கல்ஹணர் ராணியைப்பற்றி:**

**ஸா பார்திவேஷு தீர்தேஷு ஸ்நாநாய ப்ரஸ்திதா த்ருவம்।**

**திவ்யைர்வர்ஷமிஷாத்தீர்தை: ப்ராத்ருஶ்யேத ததீர்ஷ்யயா ।। 3386 ।।**

‘ராணி பூமியிலுள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்யப் புறப்படுகையில், தேவலோக தீர்த்தங்கள் பொறாமையினால் மழை ரூபத்தில் வந்தன.’

**அத்யாபி விக்ஷரத்க்ஷீரார்ணவகாந்திச்சடாச்சலாத்**

**யோ பாதீவ ஸுதாஸூதிஸிதஶ்வேதாஶ்மநிர்கத :**

**உபமந்யோருதந்யாயா தாரித்ர்யோபத்ரவாபஹ : ந**

**ருத்ரோ ருத்ரேஶ்வரோ நாம்நா ஸ்ரீமாந்கஶ்மீரபூஷணம் ।। 3389-3390 ।।**


‘ராணி ருத்ரேஶ்வரர் ஆலயத்திற்கு தங்க விமானம் ஏற்படுத்தினார். இன்றும் காஷ்மீரத்தின் அணிகலனாகத் திகழ்கிறது அது. வெள்ளைக் கல்லில் சந்த்ரனைப்போல் ப்ரகாசிக்கும் கூரை, துயரம் தீர்க்கும் ருத்ரர், உபமன்யுவிற்காக பாற்கடலைப் பெருக விட்டது போலிருந்தது.’

(தொடரும்)

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

# காஞ்சீபுரத்தில் ஸ்ரீ காமகோடிபீடம்



काञ्च्यां श्रीकामकोष्ठेऽस्मिन् गायत्रीमण्डपादधः ।
विद्धि यावत् बिलाकाशं तदूर्ध्वं मण्डपोत्तमम् ।।
शिवेन निर्मितं पूर्वं तत्तु कुण्डलिनीगृहम् ।
तदेतन्मण्डपं गत्वा श्रीचक्रयजनं चरेत् ।।

காமாக்ஷி 14-111-112

अस्मिन् बिले तु या देवी तामावाह्य परां मयि ।
षडाधारयुतां देवीं षड्दर्शन सुसंयुताम् ।।
षडाम्नाय समाराध्यां नवावरणमध्यमाम् ।
महान्तर्यागमार्गेण सुतीर्थैर्नारिकेलकैः।।

காமாக்ஷி 12-54-55.

மாதவீய சங்கர விஜயத்தில் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் திராவிட தேசத்தில் காஞ்சியை அடைந்து ஸ்ரீசக்ரத்தை அனுஸரித்து விஸ்தீர்ணமான தேவாலய நிர்மாணம் செய்வித்து, அங்கு வேத விரோதமான தந்திர மார்க்கத்தைக் கையாண்டு வந்த அர்ச்சகர்களை அகற்றி அம்பிகைக்கு வேத சம்மதமான பூஜைகளை ஏற்படுத்தியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

द्रविडांश्च ततो जगाम काञ्ची
नगरी हस्तिगिरेः नितंबकाञ्चीम् ।
सुरधाम स तत्र कारयित्वा
परविद्याशरणानुसारिचित्रम् ।।
अपवार्य च तात्रिकानतानी्
भगवत्याः श्रुतिसंमतां सपर्याम् ।

மாதவீய சங்கரவிஜயம், சர்க்கம் 15. ச்லோகம் 4-5

ஆசார்யாள் காலத்திற்குப் பிறகு இன்று வரையில் அம்பாளை பூஜிப்பவர்கள் ஆசார்யாளால் வைதீகமாக நியமிக்கப்பட்டவர்களின் பரம்பரையாகவே இருக்க வேண்டுமென்று மாதவீய சங்கர விஜயத்தில் **परविद्याशरण............... अपवार्य च तांत्रिकान्** என்னும் ச்லோகத்திலிருந்து தெரிகிறது. மார்க்கண்டேய சம்ஹிதை என்னும் நூலில் 'ஸ்ரீ ஆசார்யாள் காஞ்சியில் காமகோடி பீடத்தை ஏற்படுத்தி அந்த ஸ்ரீவித்யாராஜபீடத்தை ஆராதிக்கும் ஸாம்ராஜ்ய லக்ஷ்மியை ஸுரேச்வராசார்யாள் என்னும் தனது ஆத்ம சிஷ்யரிடத்தில் அனுப்ரவேசம் செய்வித்து ஞான ஸ்வரூப அனுபூதியை அடைந்து விளங்குகிறார்கள்.

**काञ्च्यां श्रीकामकोटीं कलिमलशमनीं कल्पयित्वा सुरेशे**
**श्रीविद्याराजपीठार्चनमहित महाराज्यसांराज्यलक्ष्मीम् ।**
**संवेश्यात्मीयशिष्ये सकलभुवनसंमोद हेतोर्महात्मा**
**चिद्रूपस्वानुभूतिं भजति भवमहांबोधिसंतारणाय ।।**

(மார்க்கண்டேய ஸம்ஹிதை.)

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சென்னை அரசாங்கத்தாரின் ஆக்ஞையின் பேரில் நாட்டிலுள்ள ஸம்ஸ்க்ருத கையெழுத்துப் பிரதிகளை பரிசோதனை செய்த 'ஹுல்ஷ்' என்னும் ஜெர்மன் அதிகாரியால் வெளியிடப்பட்ட ரிபோர்ட்டில் (Report on Search for Sanskrit Manuscripts in South India, Published by the Govt. of Madras, 1905) 2161 நம்பராகக் குறிப்பிடப்பட்டிருக்கும் குரு பரம்பரா ஸ்தோத்திரத்திலும், ஆதி சங்கராசாரிய சுவாமிகள் திக்விஜயத்திற்குப் பிறகு காஞ்சியை அடைந்து அங்கு காமாக்ஷியை ஸ்தாபித்து பரமபதத்தை அடைந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**आगच्छत् स्वेच्छया कान्ति (कांचीं) पर्यटन् पृथिवीतले ।**
**तत्र संस्थाप्य कामाक्षीं जगाम परमं पदम्** ஹுல்ஷ் ரிபோர்ட்.

**स्वेच्छया पर्यटन् भूमौ ययौ काञ्चीपुरीं गुरुः ।**
**तत्र संस्थाप्य कामाक्षीं देवीं परमगात् पदम् ।।** கூடலிச்ருங்கேரி பரம்பரை

ஆனந்தகிரி சங்கர விஜயத்தில் ஆசார்யாள் ஸ்ரீகாஞ்சியில் தர்சனமாத்திரத்தினாலே மோக்ஷத்தை அளிக்கக்கூடிய ஸ்ரீசக்ரத்தை ஸ்தாபித்து அங்கேயே தான் வசிப்பதற்கு ஸௌகரியமாக ஒரு மடத்தை ஸ்தாபித்துக் கொண்டு அவ்விடத்தில் தன் அத்வைத

ஸித்தாந்தத்தை பிரசாரம் செய்வதற்காக தன் சிஷ்யரான சுரேச்வரரை அழைத்து அவரிடம் யோக லிங்கத்தைக் கொடுத்து ‘இந்த லிங்கத்தைப் பூஜித்துக் கொண்டு இந்த காமகோடி பீடத்தில் அமர்ந்திரு’’ என்று ஆக்ஞாபித்து அங்கேயே தன் சிஷ்யர்களுடன் சுகமாய் வசித்துக் கொண்டிருந்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**अथ सर्वेषां मोक्षफ्फलप्राप्तये दर्शनादेव श्रीचक्रं प्रभवतीति भगवद्भिः आचार्यैः तत्र निर्मितं । तस्मात मुक्तिकांक्षि भि सर्वैः श्रीचक्रपूजा कर्तव्या इति निश्चित्य तत्रैव निजावासयोग्यं ठमपि परिकल्प्य तत्र निज सिद्धान्तमैद्वतं प्रकाश यितुं अन्तेवासिन सुरेश्वरमाहूय योगनामकं लिंगं पूजय इति तस्मै दत्वा त्वमत्र कामकोटिपीठं अधिवसेति अवस्थाप्य शिष्यजनैः परिपूज्यमानः श्रीपर मगुरुः सुखं उवास.** ஆனந்தகிரி சங்கர விஜயம், 65வது படலம்.

Mad. Govt. Oriental Manuscripts Library, No. 12424

பிலாகாசத்திற்குள் உள்ள காமகோடி பராசக்தி ஸ்ரீகாமாக்ஷி ஆலயத்திற்குள் பூப்ரஸ்தார ஸ்ரீசக்ர ரூபமாகவும், ஸ்ரீ ஆசார்ய ஸ்தானத்தில் ஆத்மார்த்த பூஜையில் மேரு ப்ரஸ்தார ஸ்ரீசக்ரரூபமாகவும் லோகானுக்ரஹார்த்தமாக தேவியின் அபின்ன ஸ்வரூபர்களான ஸ்ரீஆசார்ய ஸ்வாமிகள் உள்ளக் கருத்துக்கிணங்க ஸாந்நித்யம் கொண்டு விளங்குகிறாள்.

ஸ்ரீஆசார்யாளே தேவியின் ஸ்வரூபம், தேவியே ஸ்ரீஆசார்யாளின் ஸ்வரூபம் என்பதை ஐயமற விளக்கும் சிற்பங்கள் காஞ்சியிலுள்ள பல கோயில்களில் காணப்படுகின்றன. காமாக்ஷியின் தவக்கோலமும் ஆசார்யாளின் தவக்கோலமும் ஒரே விதமான பரிவாரமுடனும் ஒரேவிதமான நிலையிலும் இருப்பதைக் காண்கிறோம். ஸ்ரீ அம்பிகை ஆசார்ய ஸ்வரூபத்திற்கு அனுகுணமான ஸன்யாஸ தண்டத்தைத் தாங்கியிருக்கும் அத்புத கோலத்தைக் காமாக்ஷியம்மன் ஆலயத்தில் காண்கிறோம்.

காஞ்சியில் மூகனாயிருந்து தேவியின் பிரஸாதத்தால் கங்காப்ரவாகம் போல் 500 பாடல்களால் ஸ்ரீகாமாக்ஷியை ஸ்துதி செய்த ஸ்ரீமூக கவியின் பஞ்சசதியில் கீழ்வரும் ச்லோகம் காணப்படுகிறது.

**कुण्डलिकुमारि कुटिले चण्डि चराचरसवित्रि चामुण्डे ।**
**गुणिनि गुहारिणि गुत्ये गुरुमूर्ते त्वां नमामि कामाक्षि ।।**

இந்த ச்லோகத்தின்படி ஸ்ரீஆசார்ய மூர்த்தியும் தேவியும் ஒன்றே என்னும் உண்மை வெளியாகிறது. இந்த உண்மையையே காளிதாஸ மஹாகவியும்

दयमानदीर्घनयना देशिकरूपेण दर्शिताभ्युदयाम् ।
वामकुचनिहितवीणां वरदां संगीतमातृकां वन्दे ।।

என்னும் ச்லோகத்தில் விளக்கியிருக்கிறார். அம்பிகையே காமகோடி பீடாதிவாஸினீ, ஸ்ரீஆசார்யாளே காமகோடி பீடாதீச்வரர். இன்றைக்கு 120 வருஷங்களுக்கு முன் நடந்த காமாக்ஷி அம்மனின் தேவாலய ஸ்ரீசக்ர ஜீர்ணோத்தாரண கும்பாபிஷேகத்தில் தேவாலயத்தைப் பற்றி அக்காலத்தில் செதுக்கப்பட்ட கல்வெட்டில் கீழ்வருமாறு காணப்படுகிறது: தெலுங்கு அக்ஷரத்திலிருக்கும் இந்த சாஸனத்தின் தேவநாகரி ப்ரதி பின்வருமாறு:-

शुभमस्तु

भूम्यंगमुनिचन्द्राब्दैः शककाले मिते सति ।
पौषकृष्णदशम्यां तु विकार्यब्दे सुखावहे ।।

श्रीगौरीशपदारविन्दभजनप्राचुर्य कूलंकष–
ज्ञानानन्दकरायिताऽखिलजगत्सांराज्यलक्ष्मी पदैः ।।

कामाक्षीनिकटप्रसिद्धसुमहासर्वज्ञपीठाधिपैः
वेदोक्तस्मृतिसिद्धशिष्ट निवाचारप्रतिष्ठापकैः ।।

श्रीमहादेवयोगीन्द्रपूर्णानुग्रहभाजनैः ।
श्री चन्द्रशेखरेन्द्राख्यैः कुम्भकोणात् समागतैः ।।

कामकोटिपदाधीशैः दृढीकृत्यालयं मुदा ।
कुंभाभिषेकः कामाक्ष्याः जीर्णोद्धारः कृतः शुभः ।।

स्वस्ति श्रीविजयाभ्युदय शालिवाहनशकाब्दाः 1761

विकारिनामसंवत्सरपुष्यबहुलदशमीबुधवारयुक्तमैन शुभदिन– मन्दु श्रीकाञ्चीकाम कोटिपीठाधिपतुलयिन श्रीचन्द्रशेखर स्वा– मुलवारु कुंभघोणान्नुश्चि कांचिकि विजयं चेशि श्रीकामाक्षी अम्मवारि आलयजीर्णोद्धारणकुंभाभिषेकं चेशि सकलजन– संतोष चेशिरी ।

प्रकृतिं च गुहाश्रयां महोग्रां स्वकृते चक्रवरे प्रवेश्य योऽप्रे ।
अकृताश्रुतसौम्यमूर्तिमार्या सुकृतं नः स विनोतु शंकरार्यः ।।

# ஆடி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *15-07-2024* | திங்கள் | ஸ்வாதி வேத பாராயணம் |
| *17-07-2024* | புதன் | ஏகாதசி அனுஷம் தேர் ; அனுஷம் வேத பாராயணம் |
| *18-07-2024* | வியாழன் | த்வாதசி ; சாதுர்மாஸ்யாரம்பம் |
| *19-07-2024* | வெள்ளி | மூலம் தேர் ; மூலம் வேத பாராயணம் ப்ரதோஷ பூஜை |
| *21-07-2024* | ஞாயிறு | வியாஸ பூஜை ; குரு பூர்ணிமா உத்ராடம் தேர் ; உத்ராடம் வேத பாராயணம் |
| *23-07-2024* | செவ்வாய் | ஸ்ரீ காஞ்சி ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் ஜயந்தி அவிட்டம் தேர் ; அவிட்டம் வேத பாராயணம் |
| *29-07-2024* | திங்கள் | ஆடி கிருத்திகை |
| *31-07-2024* | புதன் | ஏகாதசி |
| *01-08-2024* | வியாழன் | த்வாதசி ; ப்ரதோஷ பூஜை |
| *02-08-2024* | வெள்ளி | ஆடிப்பெருக்கு |
| *07-08-2024* | புதன் | ஆடிப்பூரம் |
| *11-08-2024* | ஞாயிறு | ஸ்வாதி வேத பாராயணம் |
| *13-08-2024* | செவ்வாய் | அனுஷம் தேர் |
| *14-08-2024* | புதன் | அனுஷம் வேத பாராயணம் |
| *15-08-2024* | வியாழன் | மூலம் தேர் |
| *16-08-2024* | வெள்ளி | மூலம் வேத பாராயணம் ஏகாதசி ; வரலக்ஷ்மி வ்ரதம் |

# நாம ராமாயணம்

இந்த நாம ராமாயணம் 108 வாக்யங்களைக் கொண்டது. ராமாயணம் முழுவதையும் அழகாகக் கோர்த்து எழுதப்பட்டுள்ளது. துளஸீதாஸரால் எழுதப்பட்டது. அனைவரும் பாராயணம் செய்வது நலம். குழந்தைகளுக்கு ஓதுவித்தல் அதனினும் நலம். தினம் எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களால் பாடப்பட்ட இந்த ஸங்கீர்த்தனத்தை கேட்டல் நலம். ஒவ்வொரு வாக்யத்திற்கும் பின் நான் சரணடைகிறேன் என்று சேர்த்து கொள்ளவும்.

## किष्किन्दा कान्डम्


हनुमत् सेवित निजपद राम्

नत सुग्रीवाभीष्ट्द राम्

गर्वितवाली सम्हारक राम्

वानर दूत प्रेशकराम्

हितकर लक्ष्मण सम्युत राम्



## सुन्दर कान्डम्

कपिवर सन्तत सम्स्कृद राम्

तत्गति विघ्न हृद्ध्वम्सक राम्

सीता प्राण दारक राम्

दुश्टदशानन् दूशित राम्

शिष्ट हनूमथ् भूशित राम्

सीतावेदित काकावन राम्

क्रुत चूडामणि दर्शन राम्

कपिवर वचनाश्वासित राम्

**राम राम जय राजा राम्**

**राम राम जय सीथा राम्**

# கிஷ்கிந்தா காண்டம்

**ஹனுமத்ஸேவித நிஜ பத ராம்**

*ஹனுமனால் வணங்கப்பட்ட ராமனை*

**நதஸுக்ரீவாபீஷ்டதத ராம்**

*வணங்கிய ஸுக்ரீவனுக்கு அபீஷ்டத்தை அளித்த ராமனை*

**கர்வித வாலி ஸம்ஹாரக ராம்**

*கர்வியான வாலியை ஸம்ஹாரம் செய்த ராமனை*

**வானர தூத ப்ரேஷக ராம்**

*வானரனை தூதாக அனுப்பிய ராமனை*


**ஹிதகர லக்ஷ்மண ஸம்யுத ராம்**

*ஹிதம் செய்யும் லக்ஷ்மணனுடன் இருக்கும் ராமனை*

**பஞ்சவடீதட ஸுஸ்தித ராம்**

*பஞ்சவடியில் வசித்த ராமனை*

**ராமா ராம ஜய ராஜா ராம் ராம ராம ஜய ஸீதா ராம்**



# ஸுந்தர காண்டம்

**கபிவர ஸந்தத ஸம்ஸ்க்ருத ராம்**

*ஹனுமானால் எப்போதும் நினைக்கப்பட்ட ராமனை*

**ததகதி விக்ன த்வம்சக ராம்**

*வழியில் வந்த விக்னத்தை த்வம்ஸம் செய்த ராமனை*

**சீதா ப்ராணா தாரக ராம்**

*ஸீதையை ப்ராணன் போல் தரித்த ராமனை*

**துஷ்ட தசானன தூஷித ராம்**

*துஷ்டனான ராவணனை தூஷித்த ராமனை*

**சிஷ்ட ஹனுமத் பூஜித ராம்**

*சிஷ்டனான ஹனுமாரால் பூஜிக்கப்பட்ட ராமனை*

**ஸீதாவேதித காகாவன் ராம்**

*ஸீதையால் சொல்லப்பட்ட காகாஸுரன் கதையை கேட்ட ராமனை*

**க்ருதசூடாமணி தர்ஸன ராம்**

*சூடாமணியை தர்சித்த ராமனை*

**கபிவர வசன ஆஸ்வாஸித ராம்**

*ஹனுமானின் வசனத்தால் ஆஸ்வாஸம் செய்யப்பட்ட ராமனை*

**ராம ராம ஜய ராஜா ராம்**
**ராம ராம ஜய ஸீதா ராம்**

# சாணக்ய ஸுபாஷிதம்

**பூமிக்குப் பாரம்**

**மாம்ஸபக்ஷை: ஸுராபானைர் மூடைச்சாக்ஷர வர்ஜிதை:**
**பஸுபி:புருஷாகாரைர் பாராக்ராந்தா வஸுந்தரா ॥**

*ஊனுண்ணிகளாலும், மது குடியர்களாலும், படிப்பறிவில்லாதவர்களாலும் பசுத்தோல் போர்த்திய மனிதர்களால் பூமி ஆக்ரமிக்கப்பட்டுள்ளது*

**வரம்**

**துர்ஜனஸ்ய ச ஸர்பஸ்ய வரம் ஸர்போ ந துர்ஜன:**
**ஸர்பா தஸந்தி காலே ச துர்ஜனோ பதே பதே ॥**

*துஷ்டன், பாம்பு, இருவர்களுக்குள் பாம்பே சிறந்தது. ஏதோ ஒரு காலத்தில்தான் பாம்பு கடிக்கும். துஷ்டன் அவ்வப்போது தொல்லை தருவான்.*

**வீண்**

**ஆலஸ்யோபஹதா வித்யா பரஹஸ்தே கதம் தனம்**
**அல்பபீஜஹதம் க்ஷேத்ரம் ஹதம் ஸைன்யமனாயகம் ॥**

*சோம்பலால் வீணாகும் கல்வி, அந்நியனிடத்தில் இருக்கும் பணம் - வீண். விதைக்கப்படாத நிலம் வீண். நாயகன் இல்லாத ஸேனை வீண்.*

**மங்கிய புகழ்**

**குராஜராஜ்யேன குத; ப்ரஜாஸுகம்**
**குமித்ரமித்ரேண குதோ அபி நிர்வ்ருதி:**
**குதாரதாரைச்ச குதோ க்ருஹே ஸுகம்**
**குஸிஷ்யமத்யாபயத: குதோ யஸ: ॥**

*குராஜ அரசாட்சியில் ப்ரஜைகள் என்ன ஸுகம் பெறுவர்? குமித்ரனால் என்ன நம்பிக்கைக் கிடைக்கும்? துஷ்ட மனைவியினால் இல்லத்தில் என்ன ஸுகம் இருக்கும். கெட்ட சீடனுக்குப் பாடம் சொல்வதால் என்ன புகழ் வரும்?*

*(தொடரும்)*

# குரு பூர்ணிமா சிந்தனை

குரு பூர்ணிமையில் வ்யாஸ பெருமானை சிந்திப்போம். அவர் தந்த கொடை மஹாபாரதம், பதினெண் புராணங்கள், ப்ரம்மஸூத்ரம். பின் சொன்னதைத் தவிர முன் சொல்லப்பட்டவை அனைவருக்குமான நூல்கள். மகாபாரதத்தில் கடைசியில் வ்யாஸ பெருமான் கூறிய 'பாரத ஸாவித்ரீ' புகழ் பெற்றது.

**மாதாபித்ரு ஸஹஸ்ராணி புத்ரதார ஸதானி ச**
**ஸம்ஸாரேஷ்வனுபூதானி யாந்தி யாஸ்யந்தி சாபரே ।। 1**

ஆயிரக்கணக்கான தாய் தந்தையரும், நூற்றுக்கணக்கான மனைவி மக்களும் இந்த ஸம்ஸார சக்ரத்தில் தொடர்ந்து தோன்றுகிறார்கள், தோன்றுவார்கள்.

**ஹர்ஷஸ்தானி ஸஹஸ்ராணி பயஸ்தான சதானி ச**
**திவஸே திவஸே மூடமாவிஸந்தி ந பண்டிதம் ।। 2**

இன்பத்துக்கு ஆயிரம் ஸதானங்கள், பயத்துக்கு நூறு இடங்கள். இவை தினமும் மூடனை ஆட்டுவிக்கும் பண்டிதனை அல்ல.

**ஊர்த்வபாஹுர்விரம்யேஷ ந ச கச்சித்ஸ்ருணோதி மே**
**தர்மாதர்த்தச்ச காமச்ச ஸ கிமர்த்தம் ந ஸேவ்யதே ।। 3**

கைகளைத் தூக்கிக் கொண்டு நான் கதறுகிறேன். கேட்பார் யாருமில்லை. அறத்திலிருந்துதான் பொருளும் இன்பமும் அதை ஏன் ஸேவிப்பதில்லை?

**ந ஜாது காமான்ன பயான்ன லோபாத் தர்மம் த்யஜேத் ஜீவிதஸ்யாபி ஹேதோ:**
**நித்யோ தர்ம: ஸுக துக்கே த்வனித்யே ஜீவோ நித்யோ ஹேதுரஸ்ய த்வனித்ய: ।। 4**

காமத்தினாலோ, அச்சத்தாலோ, லோபத்தாலோ அறத்தை விட்டு விடக்கூடாது. தர்மம் என்றுமுளது. இன்பமும், துன்பமும் அனித்யமனவை. ஜீவன் நித்யன் அவன் தோன்றக் காரணம் அனித்யம்.

**இமாம் பாரத ஸாவித்ரீம் ப்ராத்ருத்தாய ய: படேத்**
**ஸ பாரத பலம் ப்ராப்ய பரம் ப்ரஹ்மாதிகச்சதி ।। 5**

இந்த பாரத ஸாவித்ரியை காலையில் எவன் படிக்கிறானோ அவன் பாரதத்தைப் படித்த பயனை அடைந்து பரப்ப்ரம்மத்தை அடைவான்.

இந்த ஐந்து ஸ்லோகங்களும் ஆழமான பொருளுடையவை. அர்த்த கௌரவம் உடையவை. பாமரன் முதல் பண்டிதன் வரை யாரும் படிக்கலாம். படிப்பது மட்டுமல்ல அதன் படி நடப்பதும் வ்யாஸ பெருமானுக்கு நாம் செய்யும் குரு பூர்ணிமை பூஜை.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

### செல்லம்மா பாட்டி



பாட்டி சொன்னாள் - பெரியவா அப்போது காசியில் முகாமிட்டிருந்தார். தரிசனத்திற்குப் போயிருந்த பாட்டி தன் வயது ஒத்த இரு பெண்களுடன் அலகாபாத்தில் த்ரிவேணி ஸங்கமத்தில் ஸ்னானம் செய்ய படகில் ப்ரயாணம் செய்தார். நல்லபடியாகப் போய்க் கொண்டிருந்த படகு தடுமாறி யமுனையை நோக்கிப் போக ஆரம்பித்தது. படகின் ஆட்டம் அதிகமாகவே பாட்டியும் பெண்களும் கத்த ஆரம்பித்தனர். கட்டுப்பாட்டை மீறி போய்க் கொண்டிருந்த படகை நிலைக்குக் கொண்டுவர படகோட்டியால் முடியவில்லை. கதி கலங்கிய அவன் '**ஸ்வாமியை வேண்டிக்கோங்க**' என்று சொல்லாமல் '**ஸ்வாமிஜியை வேண்டிக்கோங்கோ**' என்றான்.

அவனுக்குப் பெரியவாளைப் பத்தி எதுவும் தெரியாது. பெண்கள் அனைவரும் பெரியவா பெரியவா என்று ப்ரார்த்தனை செய்தார்கள். என்ன ஆச்சர்யம்! துடுப்பு திடீரென்று மணல் மேட்டில் பதிந்து கொள்ள படகு நின்றது. அன்று மாலையில் பெரியவாளிடம் இதைச் சொன்னதும் பெரியவா சிரித்துக் கொண்டே 'யமுனையில் ஏது மணல் மேடு' என்றார்.

திடுக்கிட்டுப் போனார்கள் பெண்கள். காலையில் நடந்த நிகழ்ச்சியை மற்றவர்களிடம் கூறியபோது அவர்கள் சிரித்து யமுனையில் மணல் மேடாவது என்று கிண்டல் அடித்தனர். இவர்களுக்குக் குழப்பம். யமுனையில் மணல் மேடே இல்லை என்று அனைவரும் சொல்ல இவர்களுக்குக் குழப்பம். உணர்ச்சியினால் எங்கள் அனைவருக்கும் தொண்டை அடைத்தது. கண்களில் நீர் வழிந்தது. கைகளைக் கூப்பி பெரியவாளைத் த்யானித்தனர். அவர் அருளன்றி இது நடக்குமா!

இன்னொரு சமயம் பெரியவா ஹைதராபாத்துக்குப் பக்கத்தில் உள்ள க்ராமத்தில் முகாமிட்டிருந்தார். பாட்டி தன் தந்தையுடனும் சில உறவினர்களுடனும் தர்சிக்கப் போய்ருந்தார். பாட்டியின் அப்பா வித்வான். வசதியானவர் பாட்டி (செல்லம்மா).

எப்போதும் நகைகள் போட்டிருப்பார். ஒரு நாள் மத்யானம் செல்லம்மா தன் உறவினர்களுடன் சாமான்கள் வாங்கிவர கடைத் தெருவிற்குப் போயிருந்தார். நேரமாகி விட்டது. இருட்டும் சமயம் குதிரை வண்டி அமர்த்திக் கொண்டு வீடு திரும்ப அதில் அமர்ந்தனர். சிறிது நேர் வழியில் போன வண்டி நடமாட்டம் இல்லாத பாதையில் போயிற்று. பதைத்துப் போன செல்லம்மாள் ''இது வழி இல்லையே ஏன் இப்படிப் போகிறாய்' என்று வண்டிகாரனிடம் கேட்க அவன் வண்டியை நிறுத்தி செல்லம்மாள் போட்டிருந்த நகைகளைப் பற்றி ஏதோ பேச ஆரம்பித்தான்.

அதே சமயம் சாயரக்ஷை பூஜை ஆரம்பிக்கும்முன் பெரியவா அங்கிருந்தவர்களைப் பார்த்து வித்வானும் அவர் பெண்ணும் எங்கே என்று கேட்க கடைத்தெருவிற்குப் போயிருப்பதாக சொன்னார்கள். 'புது ஊர், பாஷை, புரியாத இடம், நீ போய் பார்த்துவிட்டு வா' என்று ஒருவரிடம் சொன்னபின் எந்த வழியில் போகப் போகிறாய்? என்று கேட்டார். அவர் கடைதெருவிற்குப் போகும் நேர்பாதையை குறிப்பிட, வேண்டாம் அதுக்குப் பக்கத்தில் குறுக்கு சந்து இருக்கு. அது வழியா போ' என்றார்.

வண்டிக்காரன் பேசின சமயத்திற்கு முன்னால் ஸ்ரீ மடத்து ஆள் அவர்கள் முன்னால் நின்று விட்டார். பாட்டியும் உறவினர்களும் திகைத்துப் போயினர்.

# பாரத ஸாரம்

தஞ்சாவூர் ஆர். முத்துகிருஷ்ண சாஸ்திரி

'ஐந்தாவது வேதம்' என்று போற்றப் பெற்று வரும் மகாபாரதத்தைத் தழுவிப் பல மொழிகளிலும் பல வகை நூல்கள் எழுதப்பெற்றுள்ளன; இன்னும் பலர் எழுதி வருகின்றனர். இருந்தாலும் இன்னும் அதிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியவை எவ்வளவோ உள்ளன. வியாஸ பகவான் பாண்டவர்களின் கதையை வியாஜமாக வைத்து, வேதங்களின் உட்கருத்துக்களை அனைவருக்கும் எளிதில் விளங்க வைக்கவே மகாபாரதம் என்ற மிகப் பெரிய இதிஹாஸத்தை எழுதியுள்ளார். அதிலுள்ள உயர்ந்த கருத்துக்களை வெளியிடும் பல ச்லோகங்களை ஓர் இடத்தில் திரட்டித் தருவதே இந்தக் கட்டுரையின் முக்கிய நோக்கம். முன் பின் வரலாறுகளை ஓரளவு அறிந்து கொள்ளாத வரையில் ச்லோகங்களின் கருத்து விளங்காதாகையால் தொடர்ச்சியாகக் கதையின் பகுதிகளையும் சுருக்கமாக வெளியிடுவதாக உத்தேசம்.

**மகாபாரத மகிமை**

மகாபாரதம் பல விதத்திலும் சிறந்த உத்தமமான இதிஹாஸம். இதன் பெருமைகளுள் மிகவும் முக்கியமானது, இது ஆதிமுதல் இறுதிவரையில் ஸ்ரீமந் நாராயணனுடைய பெருமைகளை விளக்குவது என்பதே. ஆதலால் இதற்கு 'நாராயண கதை' என்றும் ஒரு பெயர் உண்டு.

**नमो भगवते तस्मै व्यासायामिततेजसे ।**
**यस्य प्रसादाद्वक्ष्यामि नारायणकथामिमाम् ।।**

**நமோ பகவதே தஸ்மை வ்யாஸாயாமிததேஜஸே ।**
**யஸ்ய ப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயணகதாமிமாம் ।।**

'எவருடைய அருளினால் இந்த நாராயண கதையைச் சொல்லப் போகிறேனோ அந்த மிகப் பெருமை வாய்ந்த வியாஸ பகவானுக்கு நமஸ்காரம்.

இதிலிருந்து ஸ்ரீமந் நாராயணனுடைய மகிமைகளை விளக்கி அதன் மூலம் பகவத் பக்தியைப் பரப்புவதே இதன் முக்கிய நோக்கம் என்று தெரிய வருகிறது. 'ஒரு நூல் எவ்வளவு அழகாக இருந்தாலும், பரம பாவனமான பகவத்குணம் அதில் வர்ணிக்கப்

பெறவில்லை என்றால் அதை அறிஞர்கள் விரும்பமாட்டார்கள்' என்று ஸ்ரீபாகவதம் கூறும். இதைத் தழுவியே, **'மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்குமென்னு மாசையால் யானும் தியம் புதற்கிசைந்தேன்'** என்று வில்லிபாரதத்திலும் காண்கிறது. இந்தச் செய்யுளில், 'மாதவன் சரிதம்', 'உமாதவன் சரிதம்' என்று இரு விதமாகவும் பதம் பிரித்து, ஹரி ஹரன் இவ்விருவரின் பெருமைகளும் இதில் உள்ளன என்றும் கூறுவர்.

பாரதத்தில் மூன்றே விஷயங்கள் விளக்கப் பெற்றுள்ளன என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

**वासुदेवस्य माहात्म्यं पाण्डवानां च सत्यताम् ।**
**दुर्वृत्तं धार्तराष्ट्राणामुक्तवान् भगवानृषिः ॥**

**வாஸுதேவஸ்ய மாஹாத்ம்யம் பாண்டவாநாம் ச ஸத்யதாம் ।**
**துர்விருத்தம் தார்த்தராஷ்ட்ராணாமுக்தவாந் பகவாந் ரிஷி: ॥**

'வாஸுதேவனுடைய மகிமை, பாண்டவர்களின் நேர்மை, துரியோதனன் முதலியவர்களின் தீய செயல்கள் இவற்றையே மகரிஷி வியாஸர் நன்கு கூறியுள்ளார். இதிலிருந்தும், வாஸுதேவனுடைய மகிமைகளைக் கூறுவதே இதன் நோக்கம் என்று தெரிகிறது.

**நான்முகன் போற்றி ஐங்கரன் எழுதியது**

வேதங்களின் கருத்துக்களைக் காவியரீதியில் மிகவும் ரஸமாக வெளியிட முன்வந்த வியாஸர் பல காவிய லக்ஷணங்கள் பொருந்திய 'மகாபாரதம், என்னும் உத்தம காவியத்தை இயற்ற ஆரம்பித்தார். அப்பொழுது இதை எவ்விதம் இந்தப் புவியில் பலரும் அறிந்து கொள்ளும்படி செய்யலாம் என்று சிறிது நேரம் சிந்திக்கலானார். அப்பொழுது அங்கே நான்முகன் தோன்றினார்.

**वासुदेवस्य माहात्म्यं पाण्डवानां च सत्यताम् ।**
**दुर्वृत्तं धार्तराष्ट्राणामुक्तवान् भगवानृषिः ॥**

**க்ருதம் மயேதம் பகவந் காவ்யம் பரமபூஜிதம் ।**
**பரம் ந லேகக: கஶ்சிதேதஸ்ய புவி வித்யதே ॥**

‘பகவந், அனைவரும் போற்றத் தகுந்த இந்தக் காவியம் என்னால் இயற்றப் பெற்றுள்ளது. ஆனால் இந்தப் புவியில் இதை எழுத யாருமில்லையே?’ என்று வியாஸர் பிரம்மாவிடம் தெரிவித்தார். அப்பொழுது அந்தக் காவியத்தின் சில பகுதிகளை நான்முகன் கேட்டு அதைப் புகழ்ந்து பேசியதாவது-

**त्वया च काव्यमित्युक्तं तस्मात् काव्यं भविष्यति ।**
**अस्य काव्यस्य कवयो न समर्था विशेषणे ।**
**विशेषणे गृहस्थस्य शेषस्त्रय इवाश्रमाः ॥**

**த்வயா ச காவ்யமித்யுக்தம் தஸ்மாத் காவ்யம் பவிஷ்யதி ।**
**அஸ்ய காவ்யஸ்ய கவயோ ந ஸமர்த்தா விஶேஷணே ।**
**விஶேஷணே க்ருஹஸ்தஸ்ய ஶேஷாஸ் த்ரய இவாஶ்ரமா: ॥**

‘தங்களால் காவியம் என்று கூறப்பட்டுள்ளது. ஆதலால் இது எல்லாக் காவிய லக்ஷணங்களும் பொருந்தியதாகவே இருக்கும். பிரம்மசர்யம், வானப்ரஸ்தம், ஸந்நியாஸம் என்ற மற்ற மூன்று ஆசிரமங்களும் எப்படிக் கிருஹஸ்தாசிரமத்தை விடச் சிறந்தவை அல்லவோ, அவ்விதமே மற்ற எந்தக் கவிகளும் இதைவிடச் சிறந்த காவியத்தை இயற்றத் திறமையற்றவர்களே.’

பல துறைகளிலும் மற்ற ஆசிரமங்களை விடக் கிருஹஸ்தாசிரமம் சிறந்தது என்று ச்ருதி, ஸ்மிருதி, காவியங்களில் சொல்லியிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம், மற்ற ஆசிரமிகளுக்கும் பொதுவாக எல்லாப் பிராணிகளுக்குமே உதவி புரியத் தகுதியுள்ளவன் கிருஹஸ்தன் என்பதுதான்.

மேலும் நான்முகன் கூறுகிறார்—‘தாங்கள் பாரதம் என்னும் ஞானத் தீயை மூட்டியிராவிட்டால் அறியாமையாகிய இருள் சூழ்ந்த உலக மக்கள் மூடர்களாகவும், குருடர்களாகவும், செவிடர்களாகவும், பித்தர்களாகவும் இருந்திருப்பார்கள். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகியவற்றைச் சுருக்கமாகவும், விரிவாகவும் விளக்கிக் கூறும் பாரதம் என்ற சூரியனால் தாங்கள் மக்களின் அறியாமை என்ற இருளை அடியோடு அழித்து விட்டீர்கள். பாரதம் என்பது அழிவற்ற மரம். அதாவது எவ்வளவு விரிவாக அதன் கருத்துக்களை வெளியிட்டாலும், இன்னும் வெளியிடப்பட வேண்டிய பல கருத்துக்கள் அதில் அடங்கியிருக்கும். ஆதலால் எல்லாருடைய வாழ்வுக்கும், மேகம் காரணமாக இருப்பதுபோல், எல்லாச் சிறந்த கவிகளுக்கும் இந்தப்

பாரதம் என்ற அக்ஷய விருக்ஷம் வாழ்வுக்குக் காரணமாக இருக்கட்டும். இதை எழுதுவதற்கு ஸ்ரீமகா கணபதியை வேண்டிக் கொள்ளுங்கள்' என்று புகழ்ந்து, ஆசி மொழிகளைக் கூறிப் பிரம்மா மறைந்தார்.

जडान्धबधिरोन्मत्तं तमोभूतं जगद् भवेत् ।
यदि ज्ञानहुताशेन त्वया नोज्ज्वलितं भवेत् ।।

धर्मार्थकाममोक्षार्थैः समासव्यासकीर्तनैः ।
त्वया भारतसूर्येण नृणां विनिहतं तमः ।।

सर्वेषां कविमुख्यानामुपजीव्यो भविष्यति ।
पर्जन्य इव भूतानामक्षयो भारतद्रुमः ।
काव्यस्य लेखनार्थाय गणेशः स्मर्यतां मुने ।।

ஜடாந்தபதிரோந்மத்தம் தமோபூதம் ஜகத் பவேத் ।
யதி ஜ்ஞாநஹுதாஶேந த்வயா நோஜ்ஜ்வலிதம் பவேத் ॥

தர்மார்த்தகாமமோக்ஷார்த்தை: ஸமாஸவ்யாஸகீர்த்தநை: ।
த்வயா பாரதஸூர்யேண ந்ருணாம் விநிஹதம் தம: ॥

ஸர்வேஷாம் கவிமுக்யாநாமுபஜீவ்யோ பவிஷ்யதி ।
பர்ஜந்ய இவ பூதாநாமக்ஷயோ பாரதத்ரும: ॥

காவ்யஸ்ய லேகநார்த்தாய கணேஶ: ஸ்மர்யதாம் முநே ॥

பிறகு வியாஸர் மகாகணபதியைத் தியானம் செய்தார்.

स्मृतमात्रो गणेशानो भक्तचिन्तितपूरकः ।
तत्राजगाम विघ्नेशो वेदव्यासो यतः स्थितः ।

ஸ்ம்ருதமாத்ரோ கணேஶாநோ பக்தசிந்திதபூரக: ।
தத்ராஜகாம விக்நேஶோ வேதவ்யாஸோ யத: ஸ்தித: ॥

பக்தர்களின் விருப்பங்களையெல்லாம் பூர்த்தி செய்யும் மகாகணபதி ஸ்மரிக்கப்பட்டவுடனே வியாஸர் இருக்குமிடம் வந்து சேர்ந்தார். அவரை வரவேற்றுப் விநயத்துடன் வரவேற்றுப் பாரதத்தை எழுத வேண்டுமென்று வியாஸர் வேண்டிக் கொண்டார். அதற்கு, 'என் எழுதுகோல் இடைவிடாமல் எழுதிக் கொண்டே இருக்கும்படி தாங்கள் சொல்லிக்கொண்டே இருந்தால்தான் நான் எழுத முடியும்' என்று மகாகணபதி பதிலுரைத்தார். வியாஸர் நான் சொல்லுவதன் பொருளை அறிந்து கொள்ளாமல் தாங்கள் எழுதக் கூடாது' என்று ஒரு நிபந்தனை விதித்தார். அதை ஒப்புக் கொண்டு கணபதி எழுதத் தொடங்கினார், அப்பொழுது மகாகணபதிகூடச் சிறிது நேரம் ஆலோசித்தே அறிந்து கொள்ளும்படி பல ச்லோகங்களை ஆங்காங்கு வியாஸர் கூறினார்.

அந்த ச்லோகங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளுவதற்காகக் கணபதி சிறிது நேரம் எழுதாமல் இருப்பார். அதற்குள் வியாஸர் அடுத்துச் சொல்ல வேண்டிய பல ச்லோகங்களைத் தீர்மானம் செய்து கொள்ளுவார்.

இவ்வாறு மகாகணபதியைக் கூடச் சிறிது காலம் திணற வைத்த ச்லோகங்கள் மொத்தம் 8800. இவற்றைத்தான் 'பாரதகுட்டு' என்று கூறுவர். இப்பொழுதும் இவற்றின் பொருளை அறிந்து கொள்ளுவது மிகக் கடினமாகத்தான் இருக்கிறது. இந்தக் கடினமான ச்லோகங்களை இயற்றி வியாஸர் கூறியதாவது- இந்த எண்ணாயிரத்து எண்ணூறு ச்லோகங்களையும் நான் அறிவேன்; சுகர் அறிவார். ஸஞ்ஜயன் அறிவானோ, அறியானோ? சந்தேகந்தான்.'

(தொடரும்)

# ஆழ்வார்கள் சரித்ரம்

## திருமங்கை ஆழ்வார் 6

சோழ மண்டலம் தந்த — ஆழ்வார் — திருமங்கை ஆழ்வார். திரு நகரி நாட்டைச் சேர்ந்த ஓர் ஊரில் கள்ளர் குலத்தில் பிறந்தவர். கருப்பாய் இருந்ததால் நீலன் என்று அழைத்தனர். வில் வித்தை, ஆயுத வித்தைகளில் தேர்ச்சி பெற்றவர். சோழ அரசனின் ஸேனாபதியாக இருந்தார். அவரது வீரத்திற்குப் பரிசாக அரசர் திருமங்கை என்னும் நாட்டிற்கு அதிபதியாக்கி சிற்றரசாக்கினார்.

கள்ளாராயிருப்பினும் முத்தமிழில் ஈடுபாடு உடையவராயிருந்தார். அதே ஊரில் மருத்தவன் என்னும் பெயர் கொண்ட அடியாரிடம் குமுதவல்லி என்னும் பெண் வளர்ந்து வந்தாள். அவள் அழகைக் கேள்விப்பட்ட மன்னன் அவளை மணக்க விரும்பினார். அவளோ அந்தணர்குலம். இவரோ கள்ளர் குலம். சங்கடம் உருவானது. குமுதவல்லியோ நான் வைணவ அடியாரைத் தான் மணப்பேன் என்று கூற திருமங்கை மன்னன் திருநரையூர் நம்பி என்பவரிடம் சென்று பஞ்ச ஸம்ஸ்காரங்கள் செய்து கொண்டார். மீண்டும் அவர் திருமணம் வேண்ட அவள் தினம் ஆயிரம் வைணவ அடியார்களுக்கு அன்ன தானம் செய்தால் மணம் புரிவேன் என்று கூற அவரும் சத்தியம் செய்து அவளை மணந்தார்.

தினமும் அவர் செய்த அன்னதானத்தால் அவரது செல்வம் கரைந்தது. அரசனுக்குக் கொடுக்க வேண்டிய வரிப்பணத்தில் கை வைத்தார். இது அரசனுக்குத் தெரிய அவரை கைது செய்ய ஆட்களை அனுப்பினான். நாளை நாளை என்று சொல்லி தாமதம் செய்தார். அவர்களுடன் போரும் செய்தார். திருமங்கை மன்னனை (ஆழ்வாரைக்) காக்க எண்ணிய காஞ்சி வரதராஜப் பெருமாள் அவருடைய கனவில் தோன்றி காஞ்சிக்குச் சென்றால் புதையல் கிடைக்கும் என்று கூற அவரும் மன்னன் அனுமதி பெற்று காஞ்சிக்கு வந்தார். அங்கு வேகவதி நதிக்கரையில் புதையல் கிடைத்தது. அதிலிருந்து அரசனுக்குச் சேர வேண்டிய வரிப்பணத்தைக் கொடுத்து விட்டு மீதி பணத்தில் அன்னதானத்தைத் தொடர்ந்தார். அப்போதும் போதவில்லை. வேறு வழியில்லாமல் தன் குலத் தொழிலான களவை மேற்கொண்டார். நான்கு உற்ற நண்பர்களுடன் காட்டு வழியில் பதுங்கி இருந்து அவ்வழியே வருபவர்களிடமிருந்து கொள்ளை அடித்து வந்தார். அந்தப் பணத்தை அன்னதானத்திற்குச் செலவு செய்து வந்தார்.

அவரை ஆட்கொள்ள சமயம் வந்தது. ஒரு தம்பதி விலை உயர்ந்த ஆடைகளையும், ஆபரணங்களையும் அணிந்து கொண்டு காட்டு வழியே போயினர். அவர்களிடம்

*கத்தியைக் காட்டி எல்லா நகைகளையும் கழற்றுமாறு மிரட்ட அவர்கள் பயந்து மொத்த நகைகளையும் தந்தனர். அவர்களை உற்றுப் பார்த்து ஆடவனின் கால் விரலணிகலணையும் பல்லால் கடித்து கழற்றி எடுத்தார். திருமங்கை மன்னன் எல்லா நகைகளையும் மூட்டை கட்டி அதைத் தூக்கிய போது எடுக்க முடியவில்லை.*

*வியந்தும் பயந்தும் போன அவர் ஆடவனைப் பார்த்து நீ என்ன மந்திரவாதியா? என்று வினவ அவனும் 'ஆம் உனக்கும் மந்தரம் சொல்லித்தருவேன்' என்று கூறி எம்பெருமானின் திவ்ய அஷ்டாக்ஷர மந்த்ரத்தை உபதேசம் செய்து அவருக்கு தாயாருடன் காக்ஷி தந்து மறைந்தார் என்பது சரித்ரம். அதிலிருந்து பல திவ்ய தேசங்கள் சென்று எம்பெருமான் புகழ் பாடலானார். பெரிய திருமொழி, திருகுறுந்தாண்டகம், திரு நெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல் திருவெழு கூற்றிருக்கை போன்றவை ஆழ்வார் அருளிச் செய்த நூல்கள்.*

*நம்மாழ்வார் அவர்முன் வந்து திருவாய்மொழி முற்றும் ஓத திருமங்கை ஆழ்வார் மிக்க மகிழ்ச்சி கொண்டார். இறுதி காலத்தை திருக்குறுங்கொடி சென்று பரம பதம் அடைந்தார் என்பது வரலாறு. ஆழ்வாரது அடிகளை பக்தியுடன் ஸேவிப்போம்.*

**'வாடினேன்,வாடி வருந்தினேன் மனத்தால்**
**பெருந்துயர் இடும்பையுல் பிறந்து**
**கூடினேன் கூடி இளையவர்தம்மோடு**
**அவர்தரும் கலவியே கருதி**
**ஓடினேன் ஓடி உய்வது ஓர் பொருளால்**
**உணர்வு என்னும் பெரும் பதம் திரிந்து**
**நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்.**

**அந்த நாமம் என்ன தரும்?**
**குலம் தரும் செல்வம் தந்திடும்**
**அடியார் படு துயர் ஆயின எல்லாம்**
**நிலம்தரும் செய்யும் நீள் விசும்பு அருளும்**
**அருளொடு பெரு நிலம் அளிக்கும்**
**வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்ற**
**தாயினும் ஆயின செய்யும்**
**நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்**
**நாராயணா என்னும் நாமம்.**

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் தேவாஸுரவிபாகஜ்ஞாய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ஸத்வ்ருத்தா ஏவ தேவாச்ச விபரீதாஸ்ததாஸுரா: ।**

**மானவேஷ்வேவ வித்யந்தே இதி வேதாந்தபாஸ்கர: ।।**

மனிதர்களிலேயே நன்னடைத்தையுடைய தேவர்கள் போன்றவர்களும், கெட்ட குணங்களை உடைய அசுரர்கள் போன்றவரும் உள்ளனர்.

## 27. இருவரும் நம்முள்ளே தான் உள்ளனர்

**த்வயா ஹ ப்ராஜாபத்யா: தேவாச்ச அஸுராச்ச தத:**

**கானீயஸா ஏவ தேவா: ஜ்யாயஸா: அஸுரா: ।**

**ப்ரஹதாரண்யகோபநிஷத் 1-3-1**

*பிராஜாபதியின் மக்கள் தேவதைகள் மற்றும் அசுரர்கள் என்ற இரு பிரிவாக உள்ளனர். அவர்களில் தெய்வ சுபாவம் உள்ளவர் குறைவாகவும், அசுர சுபாவம் உள்ளவர் அதிகமாகவும் உள்ளனர்.*

பிரஜாபதி என்றால் (ப்ரஜானாம் பதி:) பிரஜைகளுக்கு எல்லாம் தந்தை. இவனே பிரம்மா. இவனுடைய குழந்தைகள் தான் ப்ராஜாபத்யர் என்று சொல்லக் கூடியவர்கள். **ப்ரஜாபதே: அபத்யானி புமாம்ஸ: ப்ராஜாபத்யா:.** பிரஜாபதியின் புத்திரர்கள் ப்ராஜாபத்யர்கள்.

இவர்களை தேவதைகள் மற்றும் அசுரர்கள் என்று இரண்டு பிரிவாகக் கூறுவர். சாத்திர ஞானத்தினால் உண்டான விவேகமும், இந்திரியங்களைப் பிரகாசிக்கக் கூடிய ஞானமும், தர்மம், ஞானம் போன்ற ஐச்வர்யங்களைப் பெற்றவரே தேவர்கள் ஆவர். சுயநலமுள்ளவராகி 'அஸுஷு ரமந்தே', இந்திரிய போகங்களிலே எப்பொழுதும் இருப்பவர்கள் அசுரர்கள். இப்படிப்பட்ட அசுரர்களே அதிகம் உள்ளனர். தெய்வத்தன்மை உடையவர் குறைவு. நம்முள்ளிலேயே தேவர்களும் அசுரர்களும் உள்ளனர்.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# ஸ்ரீ ராம ஸம்பந்தம்

கடந்த இதழில் ஒரே நிகழ்ச்சி எவ்வாறு ராமர் வாழ்க்கையிலும் திருஞானஸம்பந்தர் வாழ்க்கையிலும் நடந்தது என்பதைப் பற்றி தொடங்கினோம். அதில் ராமர் ஸரயு நதியில் அனைத்து மக்களோடும் இறங்கினார் என்றும் அவர்களுக்கு 'ஸாந்தனீகம்' என்னும் தெய்வ ஸ்தானம் கிடைத்தது என்றும் பார்த்தோம். இப்பகுதியில் அதே மாதிரியான நிகழ்ச்சி ஸம்பந்தர் வாழ்க்கையிலும் எப்படி நடந்தது என்பதைப் பார்ப்போம். இதற்கு ஆதாரம் சேக்கிழார் பெருமான் அருளிய 'பெரிய புராணம்'.

திருஞான ஸம்பந்தரின் திருமணத்திலிருந்து தொடங்குகிறது. திருநல்லூரிலுள்ள நம்பியாண்டார் நம்பியின் திருப்புதல்வியே ஸம்பந்தருக்கு கை பிடிக்க சரியான பெண் என்று முதியோர்கள் முடிவு செய்து கல்யாண வேலைகளை தொடங்கினர். வீதிகள் தோறும் தோரணங்கள், இடையிடையே கொடி மாலைகள். புனித நீர் வார்த்த பொற்குடங்களில் பாலிகைகள். மக்கள் அனைவரும் மிக்க மகிழ்ச்சியுடன் விழாவில் கலந்து கொண்டனர்.

'மறை ஒலி பொங்கி ஓங்க மங்கல வாழ்த்துமல்க
நிறைவலைச் செங்கைபற்ற நேரிழையவர் முன் அந்தப்
பொறை அணி முன்னூல் மார்பர் புகார் இல் வெண்பொரிகை அட்டி
இறைவரை ஏத்தும் வேலை எரிவலம் கொள்ள வேண்டி'

அகிற்புகை வீச துகில் விமானத்தின் கீழ் மலர்ப் பீடத்தின் மேல் மாதர்கள் வாழ்த்த வேதியர்கள் நடுவில் ஸம்பந்தர் உவந்து அமர்ந்தார். பெண்ணின் பெற்றோர்கள் மாப்பிள்ளையாக வந்தமர்ந்திருக்கும் ஸம்பந்தர் பெருமானின் பாதங்களை ஆவின் பால் கலந்த தூய நீரால் விளக்கினார். பின்பு அந்தப் பாலை அனைவரின் தலைகளின் மீதும் தெளித்தனர். பின்பு தன் குலம் கோத்ரம் கூறி என் செல்வமகளான அரு நிதிப்பாவையாரைப் பிள்ளையாருக்குக் கொடுத்தேன் என்று மும்முறை கூறினார்.வேத ஒலி முழங்க விண்ணகத்து தேவர்களும் மக்களும் கண்ணை மக்காமல் கண்டு மங்கல வாழ்த்துகள் கூறி மனம் பூரித்து நின்றனர்.

திரு நீலக்க நாயனார் ஆசார்யனாக இருந்து திருமணச் சடங்குகளை நடத்தினர். மறை ஒலி ஓங்கியது மங்கல வாழ்த்துகள் பெருகின. மணப்பெண்ணின் கரத்தை பிள்ளையார் பற்றி பொரியை அக்னியில் இட்டு மணப்பெண்ணுடன் அக்னியை வலம் வந்தார்.

பின்பு இந்த இல் வாழ்க்கை என்னை வந்து சூழ்ந்து கொண்டதால் இவளுடனே சிவன் தாள் சேர்வேன் என்று த்யானித்து திருக்கோயிலை நோக்கிப் புறப்பட்டார். இறைவரிடம் ' **நாதனே! திருநல்லூர் மேவும் பெருமண நம்பனே! உமது திருவடி சேரும் பருவம் இதுவேயாம்'** என்னும் பதிகம் பாடினார்.

உடனே சிவ பெருமான் தோன்றி ' நீயும் உன் மனைவியும் இங்கு உன் திருமணத்தைக் காண வந்த அனைவரும் என் ஜோதியுள் புகுக என்று கூறி ஒரு ஜோதியாக நின்றார்.

''தேவர்கள் தேவர்தாமும் திருவருள் புரிந்த நீயும்<br>பூவை அன்னாளும் இங்கு உன் புண்ணியத்தின் வந்தார்<br>யாவரும் எம்பால் சோதி இதன் உள் வந்து எய்தும் என்று<br>மூவுலகு ஒளியால் விம்ம முழுச்சுடர்த் தாணு ஆகி''

பின்பு ஸம்பந்தப் பெருமான் அங்கிருந்தவர்களை நோக்கி இங்கு வந்தவர்கள் அனைவரும் பிறவி நோய் நீங்க இப்பெரும் ஜோதியுள் புகுக' என்றார்.

திரு நீலக்க நாயனார் திருமுருகன், பிள்ளையாரின் தந்தை சிவபாத இருதயரும் மாமனார் அவர் சுற்றத்தார், திரு நீலகண்ட பெரும்பாணர், அங்கு மண விழா காண வந்தவர்கள், கைங்கர்யம் செய்தவர்கள், சிவிகை தாங்கியவர்கள், பணிப்பெண்கள், தவம் செய்தவர்கள், விழாக் காண வந்தவர்கள் கணவர்கள், மனைவிகள் அனைவரும் கோவில் உள்ளே செல்ல ஞான ஸம்பந்தப் பெருமான் தன் மனைவியுடன் சோதியில் புக, மேற்சொன்ன அனைவரும் அவருடன் சிவ சோதியில் ஐக்யமானார்கள். இத்தகையப் பேறு கிடைக்காதவர்கள் கை குவித்துப் போற்றித் துதித்தனர்.

முடிவுரை

ஒரே மாதிரியான நிகழ்ச்சி. ராமர் வாழ்விலும் ஸம்பந்தர் வாழ்விலும் நடந்துள்ளது. ஒன்று த்ரேதாயுகம் ஒன்று கலியுகம். ஒன்று நீரில் ஸாயுஜ்யம். இன்னொன்று நெருப்பில் ஸாயுஜ்யம். இருவரும் அவதார புருஷர்கள். அவர்களுடன் இருந்தவர்களின் பாக்யம் தான் என்ன! முதலில் சொன்னது போல் ராமர் விஷயத்தில் இந்த நிகழ்ச்சி உத்தர காண்டத்தின் உண்மையைப் பறை சாற்றுகிறது. இந்த காண்டம் பிற்சேர்க்கை என்று கூறுபவர்களுக்கு தக்கப் பதிலை நம்மாழ்வார் பாடல் மூலம் தெரிவிக்கிறது.

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 7. தர்மத்தின் மூன்று முகங்கள்

**'தரதி இதி தர்ம:'** என்ற வாக்குப்படி, உலகை எல்லா விதத்திலும் இயக்கும் சக்தியே தர்மம். எல்லா மனிதர்களையும் காப்பாற்றும் சக்தியே தர்மம். இத்தகைய உயர்ந்த தர்மத்தையே நாம் அனுஷ்டானம் செய்ய வேண்டும். இதைத் தர்க்கத்தினாலோ, பிரவசனங்களினாலோ ஆராய்ச்சி செய்வது முறையற்றது.

கீழ்வரும் மந்திரம் தர்மத்தின் மூன்று முகங்களைத் தெரிவிக்கிறது. **'ஸத்யம்வத, தர்மம் சர, ஸ்வாத்யாத் மா ப்ரமத:'** (தைத்திரீயோபநிஷத்) சத்தியத்தைச் சொல், தர்மத்தை அனுசரி, குலதர்மத்தைக் கைவிடாதே என்று வேதம் மனிதனுக்கு எச்சரிக்கை செய்கிறது.

தர்மம் என்பது நேர்மையான மார்க்கம். தனக்கும் பிறருக்கும் நன்மையை மட்டுமே கொடுக்கும் வழி முறைகளே தர்ம மார்க்கம் ஆகும். நம் வாழ்க்கையில் தர்ம மார்க்கத்தையே அனுசரிக்க வேண்டும். அதர்மத்தைப் பின்பற்றக் கூடாது. எதைச் செய்யும் போது மனம் அஞ்சுகிறதோ அது அதர்மம். எதை அனுஷ்டானம் செய்யும்போது, மனம் தைரியமாகவும் சந்தோஷமாகவும் இருக்கிறதோ அது தர்மம் ஆகும். பரோபகாரம் செய்யும்பொழுது மனம் சந்தோஷமாக இருக்கிறது அல்லவா? இதுதான் தர்மம்.

தர்மத்தின் இரண்டாவது முகம் **'ஸத்யம் வத'** சத்தியத்தையே சொல்ல வேண்டும். சத்திய வசனத்திற்கு மேலான தர்மம் உண்டா ? சத்திய வசனம் என்பது நம் வாக்கிலிருந்து வருவது. பகவான் மனிதனுக்கு நாக்கைக் கொடுத்திருப்பது சத்தியத்தைச் சொல் வதற்கே. சத்தியம் தான் தர்மத்தின் இரகசியம். சத்தியம் தான் சாதனைகளின் இரகசியம்.

தர்மத்தின் மூன்றாவது முகம் **'ஸ்வாத்யாயான்மா ப்ரமத:'** ஸ்வாத்யாயம் என்பது தன்னுடைய மதத்தின், தர்ம சம்பிரதாயத்தைக் கூறும் நூல்களைக் கற்பதாகும். பின் அந்தத் தர்மங்களைப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பது. மனிதன் பொருள் செலவில்லாமலும் கஷ்டமில்லாமலும் சுலபமாக அனுஷ்டானம் செய்வதால் உலகம் முழுவதும் சுகம், சாந்தி மற்றும் ஆனந்தம் உண்டாகிறது.

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை 'மூக ஸாரம்' என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

रणत्मन्जीराभ्याम् ललित गमनाभ्याम् सुक्रुतीनाम्
मनो वास्तव्याभ्याम् मथिततिमिराभ्याम् नकरुचा ।
निधेयाभ्याम् पत्या निजशिरसि कामाक्षि सततम्
नमस्ते पादाभ्याम् नलिनम्रुदुलाभ्याम् गिरिसुते ।।

ரணத் மஞ்சீராப்யாம் லலித கமனாப்யாம் ஸுக்ருதீனாம்
மனோ வாஸ்தவ்யாப்யாம் மதித திமிராப்யாம் நக ருசா
நிதேயாப்யாம் பத்யா நிஜ சிரஸி காமாக்ஷி ஸததம்
நமஸ்தே பாதாப்யாம் நளின ம்ருதுலாப்யாம் கிரிஸுதே (96) ।।

காமாக்ஷியே ! மலைமகளே! இனிதாக ஒலிக்கின்ற சிலம்புகளை உடையவையும், அழகிய மென்மைடயை உடையவையும், புண்யசாலிகளின் மனதில் இருப்பவையும் நகங்களின் காந்தியால் இருளை அழிப்பவையும், கணவனாலே தன் தலையில் வைத்துக் கொள்ளத் தக்கவையும், தாமரை மலர்களைப் போல் மிருதுவாக இருப்பவையும், உன்னுடைய பாதங்கள் இரண்டிற்கும் எப்போதும் நமஸ்காரம்.

(தொடரும்)